இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTRE
வாராந்த மின்னிதழ்
ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1
இதழ் 246 சனி, ஆகஸ்ட் 05, 2023 13 பக்கங்கள்

# ரணிலின் அரசியல் நகர்வுகளும் ராஜபக்ஷக்களின் எதிர்காலமும்

அகிலன்



## தமிழ் இனத்தின் இருப்பை உறுதிப்படுத்த நிலங்கள்

# பாதுகாக்கப்பட வேண்டும்

மட்டு.நகரான்

# விடைபெற்ற எங்கள் விமல் அண்ணா !

கானா பிரபா



## இலங்கையில் ஆதார் அடையாள அட்டையை கொண்டுவர இந்தியா முயற்சி

இலங்கை மக்களை கண்காணிப்பின் கீழ் கொண்டு வரும் முகமாக தனித்துவமான அடையாள அட்டைகளை அறிமுகப்படுத்து வதற்கு இந்தியா 450 மில்லியன் ரூபாய்களை இலங்கை அரசுக்கு வழங்கியுள்ளது.

அறிமுகப்படுத்தப்படும் புதிய அடையாள அட்டையில் மக்களின் முக அடையாளம், கண் அடையாளம், கைரேகை அடையாளம் உட்பட பல உயிரியல் தகவல்கள் உள்ளடக்கப்படவுள்ளன. இதன் மூலம் இலங்கை மக்களை இலங்கை அரசும், இந்திய அரசும் தொடர்ந்து கண்காணிப்புக்குள் வைத்திருக்க முடியும்.

கடந்த வெள்ளிக்கிழமை (4) கொழும்பில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்திய தூதுவர் கோபால் பாக்லே நிதியை கையளித்திருந்தார்.

எனினும் இந்த தொழில்நுட்பத்தை இலங்கை மற்றும் இந்திய அரசுகள் பயன்படுத்துவதன் மூலம் இலங்கை



மக்களினது சுயாதீனத்தன்மை பாதிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது. தமிழ் மக்களை கண்காணிப்பதற்கு இலங்கை அரசு அதனை பயன்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான தொழில்நுட்ப வசதிகளை வழங்கும் இந்தய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மக்களின் தகவல்களை தவறாக பயன் படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய அடையாள அட்டைகளின் பாவனையை ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தடை செய்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் சீனாவின் திட்டத்தை கைப்பற்றிய இந்தியா

வடக்கில் உள்ள அனலைதீவு, நைனாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய தீவுகளில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு இலங்கை அரசினால் சீனாவுக்கு வழங்கப்பட்ட திட்டங்களை அழுத்தங்கள் மூலம் இந்தியா கைப் பற்றியுள்ளது.



12 மில்லியன் டொலர்கள் பெறுமதியான இந்த திட்டங்கள் 2021 ஆம் ஆண்டு சீனாவின் செனோசர் எச்வின் என்ற நிறுவனத்திற்கு இலங்கை அரசு வழங்கியிருந்தது. ஆனால் அதற்கு இந்தியா தனது கடுமையான எதிர்ப்புக்களை இலங்கை அரசுக்கு தெரிவித்ததால் அன்றைய இலங்கை அதிபர் கோத்தபாயா ராஜபக்சா அந்த திட்டத்தை இடைநிறுத்தியிருந்தார்.

சீனா தனது திட்டத்தை மாலைதீவில் உள்ள 12 தீவுகளில் நடைமுறைப்படுத்தியிருந்ததுடன், இலங்கையில் மீண்டும் ஆரம்பிக்கப் போவதாகவும் தெரிவித்திருந்தது. எனினும் இந்தியாவின் அழுத்தம் காரணமாக சீனாவின் திட்டத்தை நிறுத்திய இலங்கை தற்போது அதனை இந்தியாவுக்கு வழங்கியுள்ளது.

இதனிடையே, மன்னார், பூநகரி மற்றும் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையம் போன்ற பிரதேசங்களிலும் எரிசக்தி திட்டம் இந்தியாவுக்கு வழங்கப் பட்டுள்ளது.

## விக்கிபீடியா தகவல்களை மாற்றிய சி.ஐ.ஏ

விக்கிபீடியா எனப்படும் தகவல் களஞ்சிய இணையத்தளத்தில் பதிவேற்றப்படும் தகவல்களை அமெரிக்காவின் புலனாய்வுத் துறையான சி.ஐ.ஏ மற்றும் எப்.பி.ஐ என்பன பத்து வருடங்களுக்கு மேல் மாற்றி அல்லது தமக்கு சாதகமாக திருத்தி பதிவேற்றி வந்ததாக விக்கிபீடியாவின் இணை நிறுவுனர் லோறி சங்கர் கடந்த புதன்கிழமை (2) ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு விக்கிபீடியா இணையத்தளம் அறிமுகப்



படுத்தப்பட்டது. ஆனால் 2007 ஆம் ஆண்டு மாணவர் ஒருவரால் விக்கிஸ்கானர் எனப்படும் கணணி தொழில்நுட்பம்கண்டுபிடிக்கப்பட்டது. அதன் மூலம் விக்கி பீடியா இணையத்தளத்தை யார் எங்கிருந்து

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## அழுத்தங்களுக்கு அடிபணியப்போவதில்லை

## நைஜெர் அதிபர்



மேற்குலகத்தினது அல்லது அவர்களின் கூட்டணி ஆபிரிக்க நாடுகளின் அழுத்தங்களுக்கு தாம் ஒருபோதும் அடிபணியப்போவதில்லை என அண்மையில் இராணுவப் புரட்சி மூலம் நாட்டை கைப்பற்றிய இராணுவ ஜெனரல் அடோரகமனே சியானி கடந்த வியாழக்கிழமை (3) தெரிவித்துள்ளார்.

இராணுவப் புரட்சியை தொடர்ந்து பிரான்ஸ், அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உட்பட பல நாடுகள் தமது நாட்டு மக்களை அங்கிருந்து வெளியேற்றி வருகின்றன. மேற்கு ஆபிரிக்க நாடுகள் நைஜெர் மீது பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

ஒரு வாரத்திற்குள் முன்னைய அதிபரிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்படாது விட்டால் படைநடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் 15 நாடுகளை கொண்ட மேற்கு ஆபிரிக்க

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## பொருளாதார தரமிறக்கலுக்கு எதிராக அமெரிக்கா கடும் சீற்றம்

அமெரிக்காவின் பொருளாதார உறுதித்தன்மையின் தரத்தை பிற்ஸ் எனப்படும் அனைத்துலக பொருளாதார தரப்படுத்தும் நிறுவனம் தரமிறக்கியதை அமெரிக்கா கடுமையாக சாடியுள்ளது.



நிதி நிறுவனத்தின் செயற்பாடு அர்த்தமற்றது, தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு எதிரான அமெரிக்காவின் தற்காப்பு நடவடிக்கைகளை அது கருத்தில் எடுக்கவில்லை என அமெரிக்காவின் திறைசேரி செயலாளர் ஜெனற் ஜெலன் கடந்த வியாழக்கிழமை (3) தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பொருளாதாரம் தொடர்ந்து வீழ்ச்சிகண்டு வருகின்றது. அதனை தடுப்பதற்காகஅமெரிக்காஅண்மையில்தனது

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## இந்தியாவில் முஸ்லீம் மக்கள் மீது தாக்குதல்

## அமெரிக்கா கவலை

இந்தியா அமைதிகாக்க வேணும் என்பதுடன், இந்தியாவின் அரசியல் கட்சிகள் தமது வன்முறைகளை கைவிட வேணும் என அமெரிக்காவின் வெளிவிவகாரத் திணைக்களத்தின் பேச்சாளர் மத்தியூ மில்லர் கடந்த புதன் கிழமை(3) தெரிவித்துள்ளார்.

இந்திய தலைநகர் புதுடில்லியில் இருந்து 50 கி.மீ தொலைவில் உள்ள ஹரியானா மாநிலத்தின் வடக்கு பகுதியில் கடந்த திங்கட்கிழமை (31) ஏற்பட்ட வன்முறையில் இரண்டு காவல்துறையினர்



உட்பட 6 பேர் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர். பெருமளவர்கள் காயமடைந்துள்ளதுடன், பெருமளவான சொத்துக்களும் அழிவடைந்தும், சேதமடைந்தும்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## தேர்தலுக்காக கொண்டுவரப்பட்ட அரிசி ஏற்றுமதி தடை



பசுமதி வகையல்லாத அரசி வகைகளுக்கான ஏற்றுமதித் தடையை இந்திய அரசு கடந்த மாதம் 20 ஆம் நாள் கொண்டுவந்தது என்பது எதிர்வரும் வருடம் இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலுக்கான அரசியல் வியூகம் என புதுடில்லியை தளமாகக் கொண்ட ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தியாவின் இந்த அறிவிப்பால் வெளிநாடுகளில் உள்ள மக்கள் அதிகளவில் அரிசியை வாங்கி பதுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் அதேசமயம் இந்தியா முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என அனைத்துலக நாணயநிதியம் கேட்டுக்கொண்டுள்ளது. இந்திய மக்களும் அரிசி வாங்குவதில் ஆர்வம் காண்பித்து வருகின்றனர்.

இந்தியாவின் தானியங்கள் 130 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# சுதுமலை பிரகடனத்தின் தீவிரத்தை உணராத இலங்கை, இந்திய அரசுகள்

*பிராந்திய வல்லரசான இந்தியாவின் பிராந்திய நலன்கருதி கொண்டுவரப்பட்ட இலங்கை இந்திய உடன்பாட்டில் மிக முக்கிய புறக்கணிக்க முடியாத சக்தியாக தமிழ் இனம் விளங்கியதை எடுத்துக்காட்டிய தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் சுதுமலை பிரகடனம் மேற்கொள்ளப்பட்ட நாளின் நினைவுநாள் கடந்த வெள்ளிக்கிழமையாகும் (4).*

*தமிழர் தேசத்தின் அரசியல் வேணவாவையும், இறைமையையும், தனித்துவத்தையும் பேணும் வகையில் வரலாற்றில் அதன் செல் நெறியாக மறையாக, யாப்பாக விளங்கும் வட்டுக்கோட்டை தீர்மானம் 1976 ஆம் ஆண்டும், திம்புக் கோட்பாடுகள் 1985 ஆண்டும், சுதுமலை பிரகடனம் 1987 ஆண்டும் என தமிழ் இனத்தின் இறைமையை உலகுக்கு எடுத்துரைத்த ஆண்டுகளாகும்.*




*சுதுமலை பிரகடனத்தின் தீவிரத் தன்மையை உணர்ந்துகொள்ளாத இந்திய அரசும், இலங்கை அரசும் அதற்கான பலன்களை அனுபவித்து மீண்டும் 1987 ஆம் ஆண்டு அவர்கள் இருந்த நிலைக்கு தற்போது வந்துள்ளது என்பது அந்த உரையின் தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்துகின்றது.*

*இலங்கையின் அதிபர் ஒருவர் தனது சொந்த மக்களால் நாட்டைவிட்டு விரட்டியடிக்கப்பட்ட நிலையை உருவாக்கியதும், அதே நாடு தன்னை திவாலான நாடாக அறிவித்ததும், தற்போது வடக்கு - கிழக்கு என்ற தமிழர் தாயகப்பகுதியாவது தனக்கு கிடைக்காதா என இந்தியா ஏங்கி நிற்பதும் அன்று மேற்கொள்ளப்பட்ட பிரகடனத்தின் கனாதியை அவர்கள் கவனிக்கத் தவறியதே காரணம்.*

*இன்று மீண்டும் இந்திய தூதுவர் தமிழ் கட்சிகளை அழைத்து பேசுகின்றார், இலங்கை அரச தலைவர் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன் என்கிறார் ஆனால் அவர்களால் கொண்டுவரப்படும் திருத்தம் என்பது தமிழர்களுக்கு குறைந்தபட்ச அதிகாரத்தை வழங்குமே தவிர முழுமையான தீர்வாகாது.*

*ஆனால் அதிலும் சில அதிகாரங்களை கொடுப்பதற்கு இலங்கை அரசு பின்னிற்பதை தமிழர் தரப்பினரால் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை தமிழ் இனம் ஆணித்தரமாக கூறவேண்டிய நேரமிது. தொடர் ஆக்கிரமிப்பிற்குள்ளாகி இன அழிப்புக்கு முகம் கொடுத்துக்கொண்டிருக்கும் எமக்கு எமது அரசியல் வேணவாவை உலகறிவிக்கும் ஒரு அரிய வாய்பாக 2022 ஆம் ஆண்டு அமைந்திருந்தது. அது தான் இலங்கைளின் வீழ்ச்சி.*

*ஆனால் நாம் தாயகம், புலம், தமிழகம் என பல தளங்களில் கடுமையாக முயற்சித்தும் எமக்கிடையில் ஒரு ஒருங்கிணைவு இல்லாததால் எமது முயற்சிகள் எவையும் பலனழிக்கவில்லை. வரும் வாய்ப்புக்களை தவறவிட்டுவிட்ட பின்னர் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்துவதில் அர்த்தமில்லை.*

*இனியாவது விழிப்புடன் இருப்போம், தொடரும் இலங்கை அரசின் பொருண்மிய சிக்கல்களும், பிராந்திய முறுகல்களும், உலக வல்லரசுகளின் அடுத்த புவிசார் அரசியல் போட்டிகளும், 2024 ஆம் ஆண்டை எமக்கானதாக மாற்றலாம் என்ற நம்பிக்கை எம்மிடம் இருக்கின்றது. அதனை எட்டுவதற்கு இப்போதே தயாராவோம்.*

# இனியாவது ஈழத்தமிழர் இறைமையைக் காப்பாற்ற வேண்டிய உங்கள் கடமையைச் செய்யுங்கள்!

சிறிலங்காவின் இன்றைய அரசத் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் ஓராண்டு ஆட்சியைத் திரும்பிப் பார்க்கையில் ஈழத்தமிழரின் இறைமையைச் சிறிலங்காவின் படைபலத்தாலும் அரச பயங்கரவாதத்தாலும் ஆக்கிரமித்து ஒடுக்கும் ஆட்சியாகவே இதுவும் தொடர்கிறது என்பதே உறுதியாகிறது.

இதன் கடந்த வாரச் செயலாக கடல்வளத்திலும் இந்திய இலங்கையின் முக்கிய பகுதியாக உள்ள ஈழத்தின் தீவுப்பகுதியை கொழும்பு அதிகாரிகளின் நேரடி ஆட்சிப்படுத்தலுக்குள் கொண்டு வருவதற்கான தீவுப்பகுதி அதிகாரசபை சட்ட வரைபு பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது என்பது தெரியவந்துள்ளது. இதன் வழி சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இந்துமாக்கடல் வழிப் பாதைக்கு முக்கியமாக உள்ள ஈழத்தமிழரின் இந்தத் தீவுக் கூட்டங்களை சிறிலங்கா தனது அதிகாரத்தில் உள்ளது என உறுதிப்படுத்தி குறிப்பாக இந்தியாவின் உரிமை பாராட்டலை தடுத்து நிறுத்திச் சீனாவுக்கு மகிழச்சியை அளித்து விட்டு ரணில் அவர்கள் சீனாவுக்கான தனது பயணத்தைத் தொடங்கவுள்ளார். அதே வேளை "என் மண் - என் மக்கள்" எனக் கச்சதீவு மீட்புக்கான வீரப் பாடலமைத்து இராமேஸ்வரத்துக்குப் பாதயாத்திரை ஒன்றை கடந்த வாரத்தில் தொடங்கியுள்ள பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டு தலைவரான அண்ணாமலை அவர்களுக்கும் அப்பகுதி சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனதிபதியின் அதிகார சபைக்குள் உள்ள பகுதி என முகத்தில் நோட்டிஸ் அடித்து ஒட்டும் வேலையைச் சிறிலங்கா செய்து அவருடைய எதிர்வரும் தேர்தல் வெற்றிக்கான பயணத்தையும் அந்த இலக்கை அடைய முடியாதவாறு தோற்கடித்துள்ளது. ஈழத்தமிழர்களின் இறைமையின் அடிப்படையிலான அவர்களின் தன்னாட்சியே இந்தியாவினதும் பாதுகாப்புக்கான தேவை என்பதை அண்ணாமலை அவர்கள் பாரதிய சனதா கட்சிக்கு எடுத்துரைத்து சிறிலங்காவின் இறைமைக்குள் ஈழத்தமிழரின் இறைமை பிரித்தானியக் காலனித்துவத்தால் அடைவு வைக்கப்பட்டுள்ள நிலையில் இருந்து ஈழத்தமிழர்கள் முன்னைய நிலையை அடைய உதவ வெண்டுமென்பதே இலக்கின் வேண்டுகோளாக உள்ளது. இல்லையேல் தீவுப்பகுதிக் கடல் வழியான இந்திய பாதுகாப்பு என்றும் கேள்விக்குறியாகவே தொடரும் என்பதே நடைமுறையுண்மை.

மேலும் ரணில் இவ்வாரத்தில் அறிவித்துள்ள "தெங்கு வள முக்கோண வயலம் 02" என்பது பருத்தித்துறை முதல் கொடிகாமம் பளை வழி எங்கெங்கு எல்லாம் சிறிலங்காப் படைகள் தென்னந் தோப்புக்களை குண்டு வீசி அழித்ததோ அந்த அந்த இடங்களில் எல்லாம் மீளவும் தென்னந் தோப்புக்களை உருவாக்கி அவற்றை 'தெங்கு வள முக்கோண வயலம் 01' ஆகவுள்ள குருநாகலை மையப்படுத்திய சிங்களப் பகுதிகளுடன் இணைத்து வடக்கில் நிலை கொண்டுள்ள படையினருக்குத் தொழில் முயற்சியாக மாற்றி நிரந்தரச் சிங்களக் குடியேற்றங்களை நிறுவும் முயற்சியாக உள்ளது.

அவ்வாறே இந்தியாவும் பாக்கிஸ்தானும் அரிசி ஏற்றுமதிக்குத் தடைவிதித்ததை எதிர்கொள்ள ஈழத்தமிழர்களின் எந்த நெற்பயிர்ச் செய்கையை சிறிலங்கா படைபலத்தால் அழித்ததோ அந்த வயல்வெளிகளை மீளவும் உற்பத்திக்குள் கொண்டு வந்து படையினர்க்கு காணி வழங்கும் திட்டத்தையும் சிறிலங்கா தொடங்கியுள்ளது.

அவ்வாறே சீனாவின் கடலட்டை வளர்ச்சிக்குக் குடாநாட்டுப் பரவைக்கடல்களை வழங்குவதற்காக யாழ்ப்பாணம் பாசையூர் முதல் பூநகரி வரை களங்கட்டி/சிறகுவலை மீன்பிடி முறைமையினைச் சிறிலங்கா தொல்லியல் திணைக்களம் தடைசெய்துள்ளது. அதே வேளை பூநகரியை யாழ்குடாநாட்டு பல்கலைக்கழக நகரரக மாற்றுதல் என்ற திட்டத்தின் வழி பாரிய கட்டிடங்களை அமைக்கவென மண்ணை அகழ்ந்து தமிழர்களின் தொன்மைத் தலைநகரில் உள்ள அவர்களின் தொல்லியல் எச்சங்களை அழிப்பதற்கான முயற்சிகளும் திட்ட உருவாக்கமாகிக் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைப்பீடம் தவிர்ந்த அனைத்து பீடங்களும் சிங்களப் பேராசிரியர்களின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உள்ளேயே சாது சாது வென முழங்கி புத்தர் சிலை ஊர்வலம் நடக்கும் அளவுக்குச் சிங்கள பௌத்த விரிவாக்கம் இடம்பெற்றுள்ள நிலையில் ரணிலின் திட்டங்களின் உள்நோக்கு என்னவென்பதைச் சொல்லத் தேவையில்லை.

குருந்தூர் மலை தையிட்டி என விரிவுபெற்ற பௌத்த விகாரையின் பேரால் ஈழத்தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிக்கும் திட்டம் கடந்த வாரத்தில் சுழிபுரம் பறாளாய் முருகன் கோயில் வரை நீண்டுள்ளது. இந்நிலையில் முன்னாள் வடமாகாணசபைத் தலைவர் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் நேற்று புத்தர் இலங்கைக்கு வந்து 700 ஆண்டுகளின் பின்னரே சிங்களவர் இலங்கை வந்தனர் என்ற வரலாற்று உண்மையை உரக்கச் சொல்லி இது குறித்துத் தொல்லியல் திணைக்களத்துடன் பேசவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். ஆனால் 1983ம் ஆண்டு யூலை ஈழத்தமிழின அழிப்புக்கு நேரடியாகத் தலைமை தாங்கிய ஐக்கிய தேசியக்கட்சியின் அமைச்சரான சிறில் மத்தியூ 1970களில் எழுதிய 'சிங்களர்களும் பௌத்தர்களும் எழுங்கள்' என்ற மதவெறி இனவெறி மொழிவெறி நூலில் இலங்கைப்படத்தில் வடக்கு கிழக்கில் இருந்த பௌத்த விகாரங்களதும் பன்னசாலைகளதும் இடங்களென 231 இடங்களைக் குறித்து அவற்றை மீட்க வேண்டுமென வலியுறுத்தியதையே இன்று ஐக்கிய தேசியக்கட்சித் தலைவராகவும் சிறிலங்கா மொட்டுக்கட்சியின் பொம்மை அரசத்தலைவராகவும் உள்ள ரணில் 53 ஆண்டுகளின் பின்னர் அரசபயங்கரவாதத்தின் மூலம் நடைமுறைப்படுத்தி வருகின்றார்


மாவட்ட அமைச்சர்களை நியமித்து 1980களில் ஜே. ஆர். ஜயவர்த்தனா நடைமுறைப்படுத்திய மிக மிக மட்டுப்படுத்தப்பட்ட நிர்வாகப் பகிர்வையே இன்று ரணில் பொலிஸ் அதிகாரமற்ற மாகாணசபையென தனது மாமாவான ஜே. ஆரின் கனவை நனவாக்க முயல்கின்றார். இந்நிலையில் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களோ சமஸ்டிதான் எல்லாத் தமிழ்க்கட்சிகளதும் இறுதி இலக்காக உள்ளதென்றும் ஆனால் அதை அடையத் தங்களுக்குத் தெரியாத நிலையில் 13 வது திருத்தத்தை ஏற்று அதிலிருந்து கசியும் அதிகாரங்களையாவது பெற்று தப்பிப்பிழைக்க விரும்புவதாக ஈழத்தமிழ் அரசியல்வாதிகளின் இயலாமையை அம்பலப்படுத்தியுள்ளார். 1977 மக்களாணையான இறைமையுடன் கூடிய தன்னாட்சியை வேறு எந்த வடிவிலும் மாற்றுவதற்கு எந்த அரசியல்வாதிக்கும் மக்களாணையில்லை என்பதை இலக்கு நீதியரசர் அவர்களுக்கு எடுத்துக் கூறி, ரணில் அரசியலமைப்பின் 4ம் விதியின் படி மக்களே இறைமையாளர்கள் பாராளுமன்றப் பிரதிநிதிகள் அதனை உறுதிப்படுத்துபவர்கள் என ரணில் கடந்த வாரத்தில் வலியுறுத்தியிருப்பதை மனதிருத்தி, ஈழத்தமிழரின் இறைமையாளரான நீங்கள் துப்பாக்கிகள மௌனித்த நிலையில் 1977 மக்களாணையான இறைமையுடன் கூடிய தன்னாட்சியை ஈழ மக்களின் அரசியல் தீர்வு என்பதால் அதனை அடைய சனநாயக வழிகளில் போராடுங்களென இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

அவ்வாறே சம்பந்தர் ஐயா அவர்களும் இந்தியத் தூதரின் முழுமையான 13ம் திருத்ததத்தையே இந்தியா வலியுறுத்தும் என்ற இவ்வாரச் சந்திப்பு உறுதி மொழியுடன் 15ம் திகதி ரணிலின் அனைத்துக் கட்சி மாநாட்டுக்குப் போகையில் அதனை ரணில் ஏற்காமல் பொலிஸ் அதிகாரமற்ற மாகாணசபையையே புதிய அரசியலமைபில் சேர்ப்பார் என்பது உறுதியாகியுள்ள இந்நேரத்தில் நீங்கள் கடந்த சந்திப்பில் கூறியவாறு ஈழத்தமிழர்களின் வெளியகத் தன்னாட்சி உரிமையினை உலகுக்கு வெளிப்படுத்தி உங்கள் தலைவர் தந்தை செல்வநாயகம் 1975இலேயே அதனைச் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் உலகிற்கு வெளிப்படுத்திச் சிறிலங்காப் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறியது போலவே வெளியேறி ஈழத்தமிழர் இறைமையை இனியாவது காப்பாற்றுங்கள் என்பதே இலக்கின் வேண்டுகோளாக உள்ளது.

**ஆசிரியர்**

# ரணிலின் அரசியல் நகர்வுகளும் ராஜபக்ஷக்களின் எதிர்காலமும்

அகிலன்



அரசியலிலிருந்து தாம் ஒதுங்கிப்போய் விடவில்லை, மீண்டும் எழுந்து வருவோம் எனக் காட்டிக்கொள்வதற்கான பிரயத்தனங்களை ராஜபக்ஷக்கள் முன்னெடுத்துள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைக் கால நகர்வுகள் அவர்களை வெலவெலக்கச் செய்துள்ளது. ரணிலைப் பகைக்கும் நிலையில் ராஜபக்ஷக்களோ மொட்டு அணியோ இல்லை. ஆனால், ரணிலை மீண்டும் ஜனாதிபதியாக்குவது என்ற இலக்குடன் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளால் மொட்டு அணி சிதைந்து சின்னா பின்னமாகும் நிலை உருவாகியிருக்கின்றது. இதிலிருந்து கட்சியை எப்படிப் பாதுகாப்பது என்பதுதான் ராஜபக்ஷக்கள் முன்பாக இன்றுள்ள பிரச்சினை.

கொழும்பு அரசியலை இன்று சூடாக் கிக்கொண்டிருப்பது இதுதான். அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்ததாகவே அரசியல் காய்நகர்த்தல்கள் அனைத்தும் உள்ளன. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றாலும்கூட, தனக்கு வாய்ப்பானதாக உள்ள ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதுதான் ரணிலின் இலக்கு. உள்ளூராட்சித் தேர்தல்களையோ, மாகாண சபையையோ ரணில் விரும்பாமைக்கு காரணம் என்ன என்பதை நாம் முன்னர் இந்தப் பகுதியில் பார்த்திருந்தோம்.

தற்போதைய கள நிலையின் படி அடுத்த மார்ச் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தலும், அதனைத் தொடர்ந்து பொதுத் தேர்தலும் நடைபெறும். இதுதான் ரணிலின் நிகழ்ச்சி நிரல். மாகாண, உள்ளூராட்சி தேர்தல்களுக்கு முதலில் செல்வது ஜே.வி.பி.யையும், சஜித் அணியையும் பலப்படுத்திவிடும் என்பது ரணிலின் கணக்கு. அதேவேளையில், ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்காக தமது ஐ.தே.க.வை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் அதேவேளையில், கட்சிக்கு வெளியேயும் சில அணிகளை உருவாக்குவதற்கு ரணில் மறைமுகமாக ஆதரவளிக்கின்றார். அதில், முக்கியமானதுதான் மொட்டு அணியின் அதிருப்தியாளர்களை தனக்கு ஆதரவாக இணைக்கும் வேலை.

மொட்டு அணிக்கு 10 அமைச்சர் பதவிகள் வேண்டும் என அடம்பிடித்தவர்கள் இப்போது மௌனமாகிவிட்டமைக்கு இதுவும் காரணம். அமைச்சர் பதவிகள் வேண்டாம் கட்சியைப் பிளவு படுத்தாமலிருந்தால் போதும் என்பதுதான் ராஜபக்ஷக்களின் தற்போதைய நிலைப்பாடு. மொட்டு அணியை சிங்கள இளைஞர்களின் அரகலய போராட்டம் கடந்த வருடத்தில் சின்னா பின்னமாக்கியது தெரிந்ததுதான். அதன் பின்னரும் தம்மை ராஜபக்ஷக்களுக்கு நெருக்கமானவர்களாகக் காட்டிக்கொண்டால் மக்கள் மத்தியில் செல்ல முடியாது என்பதைத் தெரிந்துகொண்ட, மொட்டுவின் அதிருப்தியாளர்கள் சிலர் தனித் தனிக் குழுக்களாகச் செயற்படத் தொடங்கியிருக்கின்றார்கள்.

இந்தக்குழுக்கள் அனைத்தும் இணைந்து ரணிலை ஆதரிப்பதற்கு முடிவெடுத்திருப்பதாகத் தெரிகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் தமது தரப்பில் யாரையும் களமிறக்க முடியாத நிலையில் உள்ள ராஜபக்ஷக்களுக்கு இது பெரும் அச்சத்தைக் கொடுக்கின்றது. சஜித் அணியிலிருந்தும் ஒரு சிலர் ரணிலுக்கு ஆதரவாக செயற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிலையில் கட்சியை எவ்வாறு காப்பாற்றுவது என்பது ராஜபக்ஷக்களுக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்திருக்கின்றது. இது ராஜபக்ஷக்களின் வாரிசு அரசியலுக்கும் இடியாக விழலாம் என்பதுதான் அவர்களது அச்சத்துக்குக் காரணம்.

இந்தப் பின்னணியில்தான், நீர்கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா உட்பட பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி சுயாதீனமாக இயங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து ஆரம்பித்துள்ள அரசியல் கூட்டணிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இப்படியான அரசியல் கூட்டணி ஆரம்பிக்கப்படுவதால், பொதுஜன பெரமுனவுக்கு பாதிப்பு ஏற்படும் என பசில் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் இந்த கூட்டணியால் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனக்கு பெரும் அழுத்தங்களை கொடுத்துவருவதாகவும் ஜனாதிபதியிடம் பசில் கூறியிருக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பாக பசில் ராஜபக்ஷ கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஜனாதிபதியை சந்தித்து இரகசியமாகப் பேசியுள்ளார். அதனைத் தொடர்ந்து நிமல் லன்சா உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் திங்கட்கிழமை ஜனாதிபதியை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

அப்போது பொதுஜன பெரமுனவின் முடிவு குறித்து ஜனாதிபதி, நிமல் லான்சாவுக்கு தெரியப்படுத்தியுள்ளார். பொதுஜன பெரமுனவுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த புதிய அரசியல் கூட்டணியின் அலுவலகம் ராஜகிரியவில் திறக்கப்பட்டுள்ளது. அவர்கள் வேகமாகச் செயற்படத் தொடங்கியுள்ளார்கள். இதுவரையில் மொட்டு அணியில் உள்ள சுமார் 40 எம்.பி.க்கள் இந்த அணியில் இணைவதற்கு விரும்பம் தெரிவித்துள்ளார்கள்.



இதனையடுத்து அதனை சீர்குலைக்க ராஜபக்ச குடும்பத்தின் முக்கிஸ்தர்கள் தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துள்ள நாமல் ராஜபக்ஷ மற்றும் நிபுண ரணவக்க ஆகியோர், புதிய அரசியல் கூட்டணிக்கு ஆதரவளித்து வரும் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் சுகீஷ்வர பண்டாரவை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## தமிழ் இனத்தின் இருப்பை உறுதிப்படுத்த நிலங்கள்

# பாதுகாக்கப்பட வேண்டும்

மட்டு.நகரான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி அபகரிப்புகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் நிலையில் அதனை தடுக்கமுடியாமல் தமிழ் தேசிய அரசியலும் அதிகாரிகளும் திணறி வரும் நிலைமையினை காணமுடிகின்றது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் அதிகளவான காணிகளையும் பெரும்பான்மையாக தமிழ் மக்களும் உள்ளதன் காரணமாக தமிழர்களை சிறுபான்மையினமாக மாற்றுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



இந்த நாட்டில் தமிழ் மக்கள் எதனை பாதுகாப்பதற்காக அகிம்சை ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் போராடினார்களோ அவற்றினை இன்று பாதுகாக்கமுடியாத நிலையில் நின்றுகொண்டிருப்பது வேதனையான விடயமாகவே பார்க்க வேண்டியுள்ளது.

வடகிழக்கு தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் அங்கு தமிழர்கள் பூரண சுதந்திரத்துடன் வாழவேண்டும் என்பதற்காக இந்த மண்ணில் மடிந்த ஆயிரக்கணக்கான போராளிகளின் கனவுகளை பேரினவாதமும் அவர்களுக்கு சாமரம் வீசுவோரும் காலில் மிதித்துக்கொண்டிருக்கும் செயற்பாடுகள் இன்று முன்னெடுக்கப்படுகின்றன.




எதிர்காலத்தில் கிழக்கு மண்ணை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. இந்த பொறுப்பிலிருந்து தமிழ் தேசிய பரப்பிலிருக்கும் யாரும் விலகிச்செல்லமுடியாது.

காணி அபகரிப்புகளை நாங்கள் தொடர்ச்சியாக பேசும் நிலைமையானது காணி அபகரிப்பினை நிறுத்துவதற்கான விழிப்புணர்வாக அமையும் என்பதனால் அது தொடர்பில் தொடர்ந்து பேசவேண்டிய நிலையில் உள்ளோம். மட்டக்களப்பு மாவட்டத்தினை பாதுகாக்கவேண்டியதன் காரணமாக அது தொடர்பில் பேசவேண்டிய நிலையில் உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் 2633 சதுரக்கிலோமீற்றர் நிலப்பரப்பினைக்கொண்ட மாவட்டமாகும். இங்குள்ள வளங்கள் என்பது தமிழர்கள் நீண்டகாலமாக பாதுகாத்துவரும் விடயமாக கருதப்படுகின்றது. யுத்த காலத்தில் கூட தமது வளங்களையும் காணிகளையும் தமிழர்கள் பாதுகாத்து தமது அடுத்த சந்ததிக்காக கொண்டுவந்ததை இன்று இல்லாமல் செய்யும் செயற்பாடுகள் மிகவும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுகின்றன.



குறிப்பாக கடந்த காலத்தில் பேசுபொருளாகயிருந்த மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள் இன்று பேசுவதற்கு யாரும் அற்ற நிலைமையே காணப்படுகின்றது.

இப்பகுதி இயற்கை வளம்கொண்ட பகுதியாக காணப்பட்டதன் காரணமாக அப்பகுதியினை தமிழர்கள் காலம்காலமாக தமது கால்நடைகளை மேய்க்கும் பகுதியாக பயன்படுத்தி வருகின்றனர்.

இப்பகுதியினை அபகரிப்பதற்கு சிங்கள பேரினவாத சக்திகள் யுத்தத்திற்கு பின்னர் பல்வேறு முன்னெடுப்புகளை முன்னெடுத்துவருகின்றனர். இப்பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் பிடிக்கப்பட்டு 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியேறுவதற்கான செயற்பாடுகளை முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனராக இருந்து அநுராத ஜகம்பத் முன்னெடுத்திருந்த நிலையில் அதற்கு எதிராக தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் இலங்கையின் உச்ச நீதிமன்றில் தொடர்ந்த வழக்கு காரணமாக குடியேற்றம் செய்யப்பட்டவர்கள் வெளியேறவேண்டிய சூழ்நிலையேற்பட்டது.

அப்பகுதியில் அத்துமீறி குடியேறியவர்களை அகற்றுவதற்கு மகாவலி அதிகாரசபை அதிகாரிகள்உறுதியளித்திருந்ததுடன்அப்பகுதியில் அத்துமீறி குடியேற்றப்பட்டவர்களை அகற்றும் பணிகளை முன்னெடுத்திருந்தாலும் அது பெயரளவிலேயே முன்னெடுக்கப்பட்டது. இதன் காரணமாக அப்பகுதியில் குடியேறிய குடியேற்ற வாசிகளினால் அப்பகுதியில் உள்ள கால்நடை பண்ணையாளர்கள் பெரும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

நீதிமன்றத்திற்கு வெளியேற்றப்பட்டதாக காட்டிக்கொண்டு சிங்களவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் மகாவலி அதிகாரசபையும் பாதுகாப்பு பிரிவினரும் செயற்படுவதாக கால்நடை பண்ணையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தாங்கள் தமது பகுதிகளில் சிறு கம்புத்தடியை வெட்டினால் கூட தமக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் மகாவலி அதிகாரசபையும் வனஇலாகாவினரும் தமது பகுதிக்குள் காடுகளை அழித்து முன்னெடுக்கும் அத்துமீறிய செயற்பாடுகளை கண்டு கொள்வதில்லையெனவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் விவாதத்திற்குரியதாக மாற்றப்பட்டிருந்தது. கால்நடை பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் நீதிமன்ற உத்தரவினையும் மீறி முன்னெடுக்கப்படும் காணிகள் அபகரிப்புகள் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.



இதன்போது குறித்த கூட்டத்தினை முன்கொண்டுசென்ற கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் மகாவலி அபிவிருத்தி சபையின் அதிகாரிகள் மீது சரமாரியான கேள்விகளை தொடுத்ததுடன் நீதிமன்ற கட்டளைகளை அமுல்படுத்தாமை குறித்து கேள்வியெழுப்பியிருந்தார். இந்த நிலையில் குறித்த பகுதியில் நீதிமன்ற கட்டளையினை அமுல்படுத்துமாறும் இரண்டு வாரங்களுக்குள் அதனை அமுல்படுத்தவேண்டும் என்ற பணிப்புரையினையும் அன்று ஆளுனர் வழங்கியிருந்தார்.

இந்த கூட்டம் நடைபெற்று ஒரு மாதத்திற்கும் மேலாகிய நிலையிலும் மகாவலி தனது கடமையினை செய்யவில்லை.

மாறாக மீண்டும் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் அத்துமீறிய செயற்பாடுகள் கடந்த சில வாரங்களாக நடைபெற தொடங்கிவிட்டது. 2017ஆம் ஆண்டு சட்ட விரோதமாக மேய்ச்சல் தரை காணியில் கட்டப்பட்ட விகாரை அகற்றப்பட்டிருந்தது.



அத்துடன் அப்பகுதியில் சட்ட விரோதமாக குடியேறியவர்களும் அகற்றப்பட்டனர். ஆனால் இன்று கிழக்கு மாகாண ஆளுனர் நீதிமன்ற கட்டளையின் படி அனைவரையும் வெளியேற்றுமாறு மகாவலி அதிகாரசபைக்கு பணிப்புரையினை விடுத்த பின்னர் மீண்டும் அகற்றப்பட்ட விகாரையினை மீளமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் அப்பகுதியில் மீண்டும் அத்துமீறிய குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாதவனை, மயிலத்தமடு பகுதியில் உள்ள கால்நடை பண்ணையாளர்களுக்கு குறித்த மேய்ச்சல் தரை காணிகளை பகிர்ந்தளித்து அவர்களை மேலும் தமது தொழிலை மேம்படுத்தப்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# நிவாரணம் வேண்டும்

துரைசாமி நடராஜா

பெருந்தோட்டத்தொழிலாளர்களின்பொருளாதார நெருக்கடி அம்மக்களின் வாழ்வில் பல்வேறு தாக்க விளைவுகளையும் ஏற்படுத்தி வருகின்றமை தெரிந்ததேயாகும். எனினும் இப்பொருளாதார நெருக்கடியினை சீர் செய்து அம்மக்களின் வாழ்வில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு போதுமான முன்னெடுப்புக்கள் அரச தரப்பில் அல்லது கம்பனியினர் தரப்பில் மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ச்சியாகவே இருந்து வருகின்றது. இதன் நம்பகத்தன்மையை பலரும் உறுதிப்படுத்தியுள்ள நிலையில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்க வேண்டியதன் அவசியத்தையும்சுட்டிக்காட்டியுள்ளனர். இதனிடையே தற்போது டொலரின் விலை வீழ்ச்சி தேயிலை விற்பனையில் சவாலை ஏற்படுத்தியுள்ளதாக கம்பனிகள் தெரிவித்துவருகின்றன. இந்நிலையானது தொழிலாளர்களுக்கான ஊதிய இழுபறி மேலும் வலுப்பெறுவதற்கான சாத்தியக் கூறுகளையே வெளிப்படுத்தி இருப்பதாக முக்கியஸ்தர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



பெருந்தோட்டங்கள் வளம் கொழிக்கும் நாட்டின் தேயிலை விளைநிலங்களாக விளங்குகின்றன. இத்தொழிற்றுறையின் எழுச்சியானது சாதக விளைவுகள் பலவற்றுக்கும் வழிசமைத்திருந்தது. எனினும் இத்தொழிற்றுறையை மேலோங்கச் செய்த தொழிலாளர்களின் வாழ்க்கை செழுமை பெறாது பாலைவனமாக வறண்டு கிடக்கின்றமை யாவரும் அறிந்த விடயமாகும். இது ஒரு சாபக்கேடோ என்று கூட பலரையும் சிந்திக்க வைத்திருக்கின்றது. வறுமைப் புயலில் சிக்கி நாளாந்தம் அல்லல்படும் இம்மக்கள் தலைநிமிர்வதற்கான வாய்ப்புகள் மற்றும் வழிவகைகள் என்பன குறைவாகவே காணப்படுகின்ற நிலையில் இம்மக்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டு சகல துறைகளிலும் இம்மக்கள் ஓரங்கட்டப்படுவது வாடிக்கையாக இருந்து வருகின்றது.

"குனிந்தால் குட்டு நிமிர்ந்தால் அடி" என்றவாறு இம்மக்களின் வாழ்க்கைப் பயணம் தொடர்ந்து கொண்டிருப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. பெருந்தோட்ட தொழிற்றுறை மற்றும் தொழிலாளர்களின் அபிவிருத்தி கருதி காத்திரமான முன்னெடுப்புக்கள் உரியவாறு மேற்கொள்ளப்படாத நிலையில் இம்மக்களை ஏமாற்றி, பலிக்கடாவாக்கி வயிறு வளர்க்கும் ஒரு கூட்டமும் இவர்களிடையே இருந்து வருகின்றது. இது "வளர்த்த கடா மார்பில் பாய்ந்த " ஒரு நிலைக்கு ஒப்பானதாகும். என்றபோதும் பல்வேறு சவால்களுக்கும் மத்தியில் இம்மக்கள் ஜீவனோபாயத்தை கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

கம்பனிகள் பெருந்தோட்டங்களை பொறுப்பேற்றதன் பின்னர் தொழிலாளர்களின் சுமை இரட்டிப்பாகி இருப்பதாக விமர்சனங்கள் இருந்து வருகின்றன. ஏற்கனவே "தாழியில் வெந்ததொழிலாளர்களைகம்பனிகள்அடுப்பில்" தள்ளி இருக்கின்றன. இதனால் ஏற்பட்ட பின்



விளைவுகள் அதிகமாகியுள்ளன என்றபோதும் தொழிலாளர்களின் நலன் சார்ந்த விடயங்களை கம்பனிகள் முன்னெடுக்கின்றனவா? என்பது கேள்விக்குறியாகியுள்ளது. இலாப நோக்கினைக்



கொண்ட கம்பனிகள் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் தர மறுப்பதாக பிரதான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. தொழில் நிலையில் தொழிலாளர்கள் சவால்கள் பலவற்றுக்கும் முகம் கொடுத்து வருகின்ற நிலையில் தொழிற்சட்டங்கள் வலுவிழந்த போக்கினையே வெளிப்படுத்தி வருகின்றன. இதேவேளை தொழிலாளர்களின் பல்வேறு உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் பல்வேறு காய்நகர்த்தல்களையும் மேற்கொண்ட தொழிற்சங்கங்களின் சமகால போக்குகளும் திருப்தி தருவதாக இல்லை. தொழிற்சங்க ஒற்றுமை சீர்குலைந்துள்ள நிலையில் பேரம்பேசும் சக்தியும் இப்போது கீழ்நிலையிலுள்ளது. ஒரு காலத்தில் தொழிற்சங்கத்தைக் கண்டால் நடுநடுங்கும் தோட்ட நிர்வாகம் இப்போது தொழிலாளர்களைக் கிள்ளி விளையாடுகின்றது. பெருந்தோட்டக் கம்பனிகள் இதற்கு ஒத்து ஊதுகின்றன.




தொழிலாளர்கள் பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறையில் தம்மை அதிகமாக ஈடுபடுத்திக் கொண்டபோதும் கம்பனியினர் அதற்கான வரப்பிரசாதங்களை அவர்களுக்கு வழங்குவதில்லை. உற்பத்திச் செலவின் அதிகரிப்பை தொடர்ச்சியாக காரணங்காட்டி கம்பனிகள் தொழிலாளர்களின் நியாயமான சம்பள உயர்வு கோரிக்கையினை மழுங்கடித்து வருகின்றன. 2002ம் ஆண்டில் ரூபா 124.06 ஆகக் காணப்பட்ட ஒரு கிலோ கிராம் தேயிலையின் உற்பத்திச் செலவீனம் 2011 இல் ரூபா 350 ஆக உயர்வடைந்துள்ளது. ஒரு கிலோகிராம் தேயிலையின் ஏல விற்பனை விலையைக் காட்டிலும் அதனை உற்பத்தி செய்வதற்கான செலவு அதிகமாக காணப்படுகின்றது. மொத்த உற்பத்திச் செலவில் சேவைகள் மற்றும் மூலப்பொருட்கள் போன்றன முறையே ஆறு வீதம் மற்றும் 16 வீதத்தை மட்டும் கொண்டுள்ள நிலையில் ஊழியர்களுக்கான செலவீனம் 63, 68 சதவீதமாக உள்ளது. கம்பனியின் ஊழியர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் சம்பளம், பிரதம நிறைவேற்று அதிகாரி முதல் தோட்ட அதிகாரி வரையிலான அனைவருக்கும் மொத்த உற்பத்தி செலவின் 10 சதவீதமாகவுள்ளது.



பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் சேமநல நடவடிக்கைகளுக்கான செலவினங்கள் போன்றன பெருந்தோட்டக் கம்பனிகளின் மொத்த செலவினத்தில் 70 சதவீதமாக அமைந்துள்ளது. இந்நிலையில் தேயிலை உற்பத்தி செலவால் தாம் மிகப்பெரும் சவால்களை எதிர்கொண்டு வருவதாக முன்னதாக கம்பனிகள் தெரிவித்திருந்தன. மேலும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் இந்த உற்பத்தி செலவினத்தில் பெரும் பங்கினை வகிப்பதாகவும், இத்தகைய அதிகரித்த செலவை ஈடுசெய்யும் வகையிலும் இத்துறையை தொடர்ந்து முன்கொண்டு செல்வதற்கும் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டிய தேவை மேலெழுந்துள்ளதாகவும் கம்பனிகள் தெரிவிக்கின்றன. அத்தோடு தொழிலாளர்கள்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# விடைபெற்ற எங்கள் விமல் அண்ணா !

கானா பிரபா

தம்பி! அந்த பிபிசியைத் திருப்பி விடு" மேசையில் குப்பி விளக்கில் படித்துக் கொண்டிருந்த என்னை உசுப்பி விடும் அப்பாவின் குரல்.

வெள்ளை விரிப்பில் உடல் போர்த்தியிருந்த வானொலியின் காதைத் திருகி சிற்றலை வரிசையில் பிபிசியைப் பிடிக்கிறேன். தாயகத்தில் இருந்த காலம் வரை இது எங்கள் வீட்டின் அறிவிக்கப்படாத கடமைகளில் ஒன்று. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தையும் ஆகாசவாணியையும் அரசியல் தத்தெடுத்துக் கொள்ள லண்டன் பிபிசியும், பிலிப்பைன்ஸ் வெரித்தாஸ் வானொலியும்தான் எங்களுக்கு அப்போது வானொலிக் காந்திகள்.

போர் மையம் கொண்ட மின்சாரமில்லா இரவுகளில் ஜாம் போத்தல் விளக்கைப் போட்டு விட்டு அந்தக் குறு வெளிச்சத்தில் குந்தி இருக்கும் அயலவர் சூழ, சைக்கிள் டைனமோவில் மின்சாரம் பிறப்பித்து பிபிசி கேட்ட காலம்,

ஓ அந்த உலகம். அங்கே உருவமற்ற குரல்கள் நம் சொந்தக்காரர்களாகி விட்ட பிரமை. அவர்கள் சொல்லே "வேதவாக்கு". அங்கே ஒரு கம்பீரக் குரல் விமல் சொக்கநாதன் என்று ஒலிக்கிறது.



ஈழத்தின் மூத்த வானொலிப் படைப்பாளி விமல் சொக்கநாதன் அவர்கள் ஆகஸ்ட் 1 ஆம் திகதி அகால மரணத்தைத் தழுவிக் கொண்டதை அதிர்ச்சியோடு ஒட்டுமொத்தத் தமிழ் உலகமே எதிர்கொண்டது.

ஈழத்தின் யாழ்ப்பாணத்தில் பிறந்த விமல் சொக்கநாதன் அவர்கள் இலங்கை வானொலியின் சிறுவர் மலர் நிகழ்ச்சி வழியாக 1959 ஆண்டு வானொலிக் கலையகத்தில் நுழைந்தவர் என்ற தகவலைப் பகிர்ந்து கொண்டவர் அவரின் வானொலிச் சகபாடி திரு பி.எச்.அப்துல் ஹமீத் அவர்கள்.



இலங்கையில் சட்டம் பயிலும் மாணவராக வானொலியின் தேசிய சேவையில் பகுதி நேரக்கலைஞராக இணைந்த விமல், சட்டக்கல்வியை முடித்த பின்னரும் 1971 இல் இலங்கை வானொலியின் வர்த்தக சேவையில் முழு நேரத்தயாரிப்பாளராக இணைந்து கொண்டார்.

1971 ஆம் ஆண்டில் இருந்து 1976 ஆம் ஆண்டு வரையான குறுகிய காலப் பகுதியிலேயே சங்க நாதம், வாலிப வட்டம், இசையும் கதையும் போன்ற நிகழ்ச்சிகளின் வழியாக தமிழ் நெஞ்சங்களின் பேரபிமானம் பெற்ற அறிவிப்பாளராக விளங்கினார்.

பின்னாளில் புகழ் பூத்த எழுத்தாளரான அருண் விஜயராணி உள்ளிட்ட பெரும் படைப்பாளிகளின் கதைகளை இசையும் கதையுமாக அரங்கேற்றிப் பெரும் புகழைச் சம்பாதித்தவர்.



வி.ஏ.அப்துல் கபூர், கே.எஸ்.நடராஜா (ஞானக்கவிஞர் நாவற்குழியூர் நடராசன்) போன்ற மூத்த வானொலி ஆளுமைகளைத் தன் குருவாக நேசித்தவர். அவுஸ்திரேலியாவில் நம்மிடையே வாழ்ந்த இலங்கை வானொலி ஆளுமை திருமதி பொன்மணி குலசிங்கம் (இலங்கை வானொலித் தமிழ்ப் பகுதி முன்னாள் இயக்குநர்) அவர்களை மிகுந்த பயபக்தியோடு எதிர்கொள்வார். இலண்டன் பிபிசி தமிழ்க் குடும்பத்தில் தன்னை இணைத்து, உலகத் தமிழ் ஒலிபரப்பில் புடமெடுத்துப் பிரகாசிக்க வைத்த "தமிழ் மாகடல் சங்கரண்ணா" என்ற தமிழோசை சங்கர் என்ற சங்கரமூர்த்தியைத் தன் வாழும் காலம் தோறும் நேசித்தவர் என்பதற்கு அவரது ஒவ்வொரு பேட்டியும் சான்று.

இசையும் கதையும் நிகழ்ச்சியில் அவர் குறித்த கதை சொல்லியாகவும், பாத்திரமாகவும் மாறி மாறிப் பயணிக்கும் உத்தியை வெகு சிறப்பாக வேறுபடுத்திக் காட்ட வல்லவர்.




இவரும், அப்துல் ஹமீதுமாக இசையும் கதையும் நிகழ்ச்சிக்காகப் பாடல்கள், சிறப்புச் சப்தங்கள் கொண்ட ஒலிப் பேழைகளோடு மிகவும் சிரத்தையாகச் செய்து முடித்தகளைப்பில் வானொலிக் கலையகத்தை விட்டு வெளியேறும்போது "என்ன இசையும் கதையும் ஒலிப்பதிவா?" என்று கேட்பார்களாம். அவ்வளவுக்கு முகம் அழுது வடிந்த நிலையில் குறித்த படைப்பின் சோகப் பாத்திரமாக மாறி விடுவார்களாம்.

இலங்கை வானொலி நேர்முகப் பரீட்சையில் தனக்குக் கிடைத்த நிரந்தர அறிவிப்பாளர் பதவியை புவனலோஜினி (வேலுப்பிள்ளை) நடராஜசிவம் என்ற புதியவருக்குக் கொடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி விட்டு, ஒலிபரப்பு ஒழுங்கு உதவியாளராக விமல் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டது அவரின் பெருந்தன்மைகளில் ஒன்று என்று இவர் வாழும்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இஸ்ரேலில் நடைபெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் அதன் இனவாத சட்டங்களும்

தமிழில்: ஜெயந்திரன்



உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்களை மட்டுப்படுத்துகின்ற ஒரு சட்டமூலத்தை இஸ்ரேலின் நாடாளுமன்றமான கெனசெட் ( *Knesset)* அண்மையில் இயற்றியிருக்கிறது. இஸ்ரேலின் இந்தச் செயற்பாடு உள்நாட்டில் மிகவும் கடுமையான எதிர்ப்பைத் தோற்றுவித்திருப்பது மட்டுமன்றி பன்னாட்டளவிலும் இந்த சட்டமூலத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு பிரதம மந்திரி பெஞ்சமின் நெத்தன்யாகுக்கும் *(Benjamin Netanhu)* அவரது அதீத வலதுசாரி அரசுக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த சட்டமூலத்தை அமுலாக்க வேண்டும் என்று இஸ்ரேல் கடந்த பல மாதங்களாக முயற்சி செய்துவந்தது. இந்த சட்டமூலத்துக்குத் தங்கள் எதிர்ப்பைப் பதிவுசெய்வதற்காக இஸ்ரேல் மக்கள் பல்லாயிரக்கணக்காக வீதிக்கு வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். 'சனநாயகத்தைப் பாதுகாப்போம்' என்ற சுலோகத்துடன் இஸ்ரேலின் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று திரண்டு, இந்தச் சட்டமூலத்தை எதிர்த்து வருவது மட்டுமன்றி, தற்போதைய அரசும் கெனசெட் மீது அது கொண்டிருக்கும் கட்டுப்பாடும் அழுத்தமும், இஸ்ரேலின் நாடாளுமன்ற சனநாயக விதிமுறைகளை மீறுவதாக அமைந்திருக்கின்றது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன.

ஆனால், அதே நேரம், இஸ்ரேலின் இவ்வகையான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அவதானிக்கின்ற பாலஸ்தீன மக்கள், இந்த சட்டமூலத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முற்றிலும் மாறுபட்ட வகையில் நோக்குவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. பாலஸ்தீனப் பிரதேசங்களை இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்திருப்பது தொடர்பாக, கெனசெட் எந்த எதிர்ப்பையும் பதிவுசெய்வதில்லை. உண்மையில், பல சட்டங்கள் எந்தவித எதிர்ப்புமின்றியே நாடாளுமன்றினால் இயற்றப்படுகின்றன. இவ்வாறாக இயற்றப்படுகின்ற சட்டங்கள் பாலஸ்தீன மக்களை அடக்கியொடுக்குவது மட்டுமன்றி, இஸ்ரேலிய மக்களுடன் ஒப்பிடும் போது, கிழக்கு ஜெரூசலம், ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை, காஸாப் பிரதேசம் போன்றவற்றில் வாழுகின்ற பாலஸ்தீன மக்கள் பாகுபாடான முறையிலேயே நடத்தப்படவும் வழிவகுக்கின்றன.

"இஸ்ரேல் நாட்டில் வாழுகின்ற பாலஸ்தீன குடிமக்களுக்கு எதிரான ஓர் இனத்துவ பாகுபாட்டுத் தன்மையை *(discrimination)* இஸ்ரேலிய சட்டங்கள் தன்னகத்தே கொண்டிருப்பதுடன், பாலஸ்தீன மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இஸ்ரேலிய யூத மக்களுக்கான சலுகைகள் நிறுவனமயப்படுத்தப்பட்டிருப்பதையும் பார்க்கக்கூடியதாகவிருக்கிறது" என்று மனித உரிமை கண்காணிப்பகத்தின் திட்டப் பணிப்பாளரான சாரி பாஷி *(Sari Bashi)* தெரிவித்தார்.



"சனநாயகத்துக்கு ஆதரவானவர்கள், இஸ்ரேலின் நீதிபரிபாலன நடைமுறைகள் மேலும் பாதிக்கப்படாமல் இருக்கும் பொருட்டு, பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதை நான் உண்மையில் மதிக்கிறேன். இந்த ஆர்ப்பாட்டக்காரர்களில் பலர் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புகளையும் அது காட்டும் பாகுபாடுகளையும் எதிர்ப்பவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எப்படிப்பட்ட இஸ்ரேலிய சனநாயகத்தைப் பாதுகாக்க முயல்கிறார்கள் என்பதில் அவர்கள் தெளிவாக இருக்க வேண்டும" என்று தனது டுவிட்டரில் அவர் ஒரு பதிவை மேற்கொண்டிருந்தார்.

பாலஸ்தீனர்களைப் பாகுபடுத்தும் வகையிலும், அவர்களது உரிமைகளை மட்டுப்படுத்தும் வகையிலும் கடந்த சில ஆண்டுகளாக இஸ்ரேலால் இயற்றப்பட்டுள்ளசட்டங்கள்என்று நிபுணர்களால் கருதப்படுகின்ற சில சட்டங்களை இங்கு நாங்கள் பார்க்கலாம்.

### உள்நுழைவோருக்கான குழுச்சட்டத்தின் விரிவாக்கம்

'தங்கள் சமூகம் மற்றும் பண்பாட்டு கட்டமைப்புக்கு பொருத்தமற்றவர்கள்' என்று கருதப்படுபவர்களை சோதனை செய்யவும், அவர்களது விண்ணப்பங்களை நிராகரிக்கவும் வழிவகை செய்யும் ஒரு சட்டமூலத்தை கடந்த சில நாட்களுக்கு முன்னர் கெனசெட் விரிவாக்கம் செய்திருந்தது. யூத மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற நகரங்களில் பாலஸ்தீன மக்கள் குடியேறுவதைத் தடுப்பதற்காகவே குறிப்பிட்ட இந்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்று அவதானிகள் கருதுகிறார்கள். 'பேரழிவு' *(Nakba)* என்று பாலஸ்தீனர்களால் அழைக்கப்படுகின்ற 1948ம் ஆண்டுக்கு முன்னும் அந்த ஆண்டிலும் பாலஸ்தீன மக்கள் வெளியேற்றப்பட்ட நகரங்கள், மேலும் அவற்றுக்கு அண்மையிலும் இந்த நகரங்கள் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றன.

"இஸ்ரேலிய நகரங்களில் யூதமக்களும் பாலஸ்தீன மக்களும் வெவ்வேறான பாகுபாடான முறையில் நடத்தப்படுவதற்கு அதிகாரத்தை வழங்கும் இந்தச் சட்டம், அண்மையில் இந்த நீதிபரிபாலன நடைமுறையில் மாற்றம் கொண்டு வரப்படுவதற்கு முன்னரேயே சனநாயக, சமத்துவ விழுமியங்கள் அங்கு பேணப்படவில்லை என்பதற்கு அண்மையில் கெனசெட்டில் இயற்றப்பட்ட இந்த சட்டம் ஓர் நல்ல எடுத்துக்காட்டாகும்"; என்று வோஷிங்டன் டி.சி. இல் அமைந்திருக்கின்ற அரபு மையத்தைச் சேர்ந்த யுசெவ் முனாய்யெர் *(Yousef Munayyer)* கூறினார்.

"மனித உரிமைகள் அமைப்புகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான சட்டங்கள், பாலஸ்தீன குடும்பங்களை ஒன்றிணைப்பது தொடர்பான சட்டங்கள், பகிஷ்கரிப்பு செய்வது தொடர்பான சட்டங்கள், பாலஸ்தீன வரலாற்றைக் கொண்டாடுவதற்கான உரிமை சம்பந்தமான சட்டங்கள் போன்றவையெல்லாம் இன்று சனநாயம் தேவை என்று கூக்குரலிடுகின்ற பலரால் இயற்றப்பட்டவை என்ற உண்மை இங்கு நினைவூட்டப்படவேண்டும்" என்று முனெய்யர் அல்ஜஸீராவிடம் தெரிவித்தார்.



### இஸ்ரேல் யூத மக்களுக்கான தேசம்

இஸ்ரேல் யூத மக்களுக்கான தேசம், தாயகம் என்று வரையறை செய்யும் ஒரு சட்டத்தை 2018 ஜூலையில் கெனசெட் இயற்றியது. இந்தச் சட்டத்தின் படி தேசத்தின் உத்தியோகபூர்வ மொழியாக எபிரேய *(Hebrew)* மொழியும், சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்குப் பகுதி உட்பட்ட ஜெரூஸலம் அதன் தலைநகரமாகவும் ஆக்கப்பட்டது.

இஸ்ரேல் தேசத்தில் பாலஸ்தீனர்களுக்கான உரிமையை முற்றாக நிராகரித்த இந்தச் சட்டம், இஸ்ரேல் தேசத்தில் தங்களது தேசிய சுயநிர்ணய உரிமையை நிலைநிறுத்துகின்ற ஆற்றல் யூத மக்களுக்கு மட்டுமே இருக்கின்றது என்றும் வரையறை செய்தது. இக்குறிப்பிட்ட சட்டம் இனத்துவ பாகுபாட்டை அரசியலமைப்பாக்கி,

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# நைஜெரின் இராணுவப்புரட்சி
# ஏன் பேசு பொருளாகின்றது?

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**



NOTE: Burkina Faso, Guinea, Mali, and Niger are suspended from ECOWAS bodies.

எண்பது விகிதமான நிலப்பரப்பை சகாரா பாலவனம் விழுங்கி நிற்க, 25 மில்லியன் மக்கள் தொகையை கொண்ட உலகின் மிக வறிய நாடான நைஜெரில் இந்த வாரம் இடம்பெற்ற இராணுவ புரட்சி உலகின் கவனத்தை ஈர்த்தது மட்டுமல்லாது, புதிய களமுனை ஒன்றும் திறக்கப்படலாம் என்ற அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை ஆபிரிக்க நாடுகளில் 7 இராணுவப் புரட்சிகள் ஏற்பட்டுள்ளன. மேற்கு ஆபிரிக்க நாடுகளில் இருந்த மேற்குலக படையணிகளின் இறுதி நாடும் பறிபோயுள்ளது.

அண்மையில் மாலியில் இடம்பெற்ற இராணுவ புரட்சியை தொடர்ந்து அங்கிருந்த பிரான்ஸ் நாட்டு படையினர் நைஜெரை நோக்கி நகர்த்தப்பட்டிருந்தனர்.

ஆனால் தற்போது நைஜெரில் ஏற்பட்டுள்ள புரட்சியை தொடர்ந்து நைஜெரின் புதிய அரசு பிரான்ஸ் நாட்டுடனான படைத்துறை ஒத்துழைப்புக்களை முறித்துள்ளது. இந்த நடவடிக்கை என்பது அங்குள்ள 1500 மேற்பட்ட பிரான்ஸ் துருப்புக்கள் வெளியேறவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமல்லாது அமெரிக்காவும் அங்கு இரண்டு ஆளில்லாத உளவு மற்றும் தாக்குதல் விமானங்களின் தளங்களை கொண்டுள்ளது. தற்போது அவர்களும் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



நைஜெருக்கான உதவிகளை அமெரிக்கா நிறுத்தியுள்ளதுடன், அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தமது மக்களையும் வெளியேற்றி வருவதுடன், மேற்குலகம் சார்பான ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார கூட்டமைப்பு எனப்படும் 15 நாடுகளின் உதவியுடன் ஒரு படை நடவடிக்கையை மேற்கொள்ளவும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல மேற்கு ஆபிரிக்க நாடுகளை போலவே நைஜரும் பிரான்ஸின் காலனித்துவத்தின் கீழ் இருந்து வந்துள்ளது. அங்கு நிதி, படைத்துறை மற்றும் உள்விவகாரங்களில் பிரான்ஸ் அதிக ஆளுமை செலுத்தி வந்துள்ளது.

ஆனால் தற்போது மேற்குலக நாடுகளை வெளியேற்றுவது மட்டுமல்லாது, ரஸ்யா உள்ளே வரவேண்டும் என புரட்சியாளர்கள் கூறுவது என்பது புவிசார் அரசியலின் முக்கியத்துவமாக கருதப்படுகின்றது. நிலங்களால் சூழப்பட்ட இந்த நாட்டில் கனிம வளங்கள் அதிகம். அந்த செல்வம் தான் அவர்களுக்கான ஆபத்தாக மாறியது.

அணுசக்தி மின்நிலையங்களுக்கு பயன்படுத்தப்படும் யுரேனியம் எனப்படும் கனிமப் பொருள் அங்கு அதிகம். அங்கிருந்து பெறப்படும் யுரேனியம் பிரான்ஸின் அணுசக்தி மின்னிலையங்களின் 40 விகித தேவையை பூர்த்தி செய்கின்றது. ஐரோப்பாவின் தேவையில் அது 25 சதவிகித இடத்தை பிடித்துள்ளது.




நைஜெர் பல தசாப்தங்களாக பட்டினியால் வாடுகின்றது. ஆனால் பிரான்ஸ் நிறுவனங்கள் அங்கிருக்கும் யுரேனியத்தை அகழ்ந்தெடுத்து சந்தையில் 218 டொலர்களுக்கு விற்பனை செய்வதுடன், நைஜெர் அரசுக்கு 11 டொலர்களையே வழங்கி வருகின்றனர். முதலாளிகளுடன் 50 இற்கு 50 அல்லது 70 இற்கு 30 என்ற விகிதத்தில் பணியாற்றுவதை கண்டுள்ளேன் ஆனால் இது 5 விகிதத்திற்கும் குறைவானது. அதாவது அந்த நாட்டை கொள்ளையடிக்கிறார்கள் எனதெரிவித்துள்ளார்ரஸ்யாவின்கூலிப்படையான வக்னர் குழுவின் தலைவர் ஜெயனி பிறிகோசன்.


தற்போது ஆபிரிக்க நாடுகளில் இடம் பெற்றுவரும் இராணுவப் புரட்சிகளின் பின்னனியில் வக்னர் குழு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. அதாவது அங்கு இடம்பெற்ற புரட்சிகளின் பின்னனியில் ரஸ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இருப்பதாக ஊகிக்கப்படுகின்றது. அரியவகை உலோகங்களின் ஏற்றுமதிக்கு சீனா தடை விதித்திருந்தது, தற்போது யுரேனியத்தின் ஏற்றுமதிக்கு நைஜெர் தடை விதித்துள்ளது.

அதாவது உலக வல்லரசுகளின் பொருளாதார மற்றும் படைத்துறை போட்டிகளில் தற்போது ஆபிரிக்க, ஆசிய மற்றும் அரபு நாடுகளும் மெல்ல மெல்ல உள்வாங்கப்படுகின்றன.

ஆனால் தொடர்ந்து ஆபிரிக்க நாடுகளை இழப்பது என்பது மேற்குலகத்தின் பொருளாதார மற்றும் படைத்துறை கட்டமைப்பை ஆட்டம் காண வைக்கும் என்பதுடன், அவர்களின் படைத்துறை மற்றும் பொருளாதார மேன்மையும் சரியும் வாய்ப்புக்களை அது ஏற்படுத்தும்.




எனவே தான் அமெரிக்காவின் சி-17ஏ ரக படைத்துறை சரக்கு விமானம் நைஜெருக்கு அண்டைய நாடான பெனின்னில் கடந்த வியாழக்கிழமை (3) தரையிறங்கி சென்றுள்ளது. அதனை தொடர்ந்து நைஜெருக்கு எதிரான படை நடவடிக்கையில் தாம் இணைந்துகொள்ளப் போவதாக பெனின் அறிவித்தள்ளது.



ஆனால் அவ்வாறு ஒரு படை நடவடிக்கை ஆரம்பமாகுமாக இருந்தால் நைஜெருக்கு ஆதரவாக தாம் படைகளை அனுப்புவோம் என மாலி மற்றும் புர்க்கீனா பாசோ ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன. படைத்துறை புரட்சியை தொடர்ந்து புதிய அதிபரும் இராணுவ ஜெனரலுமான அடோரகமனே சியானி மாலி, பெர்கினோ பசொ ஆகிய நாடுகளுக்கு அவசர பயணங்களை மேற்கொண்டு படைத்துறை உதவிகளை கேட்டதுடன், வக்னர் குழுவினருடனும் படைத்துறை உடன்பாடுகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்



# பனை மரங்கள் வல்லரசு நாடுகளிலே வளர்ந்திருந்தால் நாம் பணத்தை வாரி இறைத்திருப்போம்

ஆர்தீகன்

பனை மரங்கள் அபிவிருத்தி அடைந்த வல்லரசு நாடுகளிலே செழித்து வளரக் கூடியனவாக இருந்திருந்தால் பனம்பழங்கள் ஒவ்வொன்றும் ஈய உறைகளிலே சுற்றப்பட்டு அதன்மேல் ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு பாரிய விளம்பரங்களுடன் இங்கு இறக்குமதியாகி வந்திருக்கும்.

இலகுவில் ஏமாறக்கூடிய மனம்படைத்த நாமும் பணத்தை வாரி இறைத்து அவற்றை வாங்கி உண்டிருப்போம். இதே பனைமரங்கள் அமெரிக்கா தேசத்திலே வளருபவையாக இருந்திருந்தால் பனங்கிழங்குகளின் மருத்துவக் குணங்களை உலகறிந்திருக்கும்.



கருப்பட்டிகள் அருமருந்தாகச் சித்தரிக் கப்பட்டிருக்கும். நுங்குகளின் மகத்துவம் பேசப் பட்டிருக்கும். ஒடியல், புழுக்கொடியல், மாவகை கள் உலக சந்தையிலே பெரும் இடத்தைப் பிடித்திருக்கும். பனையின் ஒவ்வொரு பகுதியும் உலகின் உபயோகத்திற்கு வந்திருக்கும்.

ஆனால் பாவம் இந்தப் பனைமரங்கள் பாவப்பட்ட எம்மக்கள் மத்தியிலே தோன்றி பொலிவிழந்து காணப்படுகிறது. பனை மரங்களை வளர்ப்பதற்கு எமக்கு அதிக செலவீனங்கள் ஏற்படுவதில்லை என்றபோதும் அதனை நாம் வளர்க்க தவறுகின்றோம். அதன் பயன்களையும் அனுபவிக்க தவறுகின்றோம்.

பெருமளவான மரங்கள் தேவையின்றி அழிக்கப்படுவதும் எமது மண்ணில் தான். ஒரு மரம் தேவைக்காக வெட்டப்படும்போது அதற்கு மாற்றீடாக சில மரங்கள் நடப்படுவது பிரித்தானியா மக்களின் இயல்பு. ஆனால் நாம் அதனை பின்பற்றுவதில்லை என்பதே வேதனை யானது.



பானங்களிலே அதிகூடிய புரதச்செறிவு டைய பானம்நுங்கு என்பது நம்மில் பலருக்கு தெரியாது. பால் தான் புரதச்செறிவுடைய பானம் என்று நினைத்துக் கொள்கிறோம். 100g பாலிலே 3.3g புரதம் இருக்கிறது. ஆனால் 100g நுங்கிலே 10.8g புரதம் இருக்கிறது. பாலினைப்போல் 3 மடங்கு புரதச் செறிவுள்ள பானம் நுங்கு என்பதை மனதில் நிறுத்துவோம்.

நுங்கினுடைய உலர்நிறையிலே 60% புரதமும் 30% மாப்பொருளும் இருப்பதுடன் மிகக்குறைந்தளவு கொழுப்பே இதனில் காணப் படுகிறது. பனங்கூடல்களுக்குள் வசிக்கும் எமது சிறார்கள் புரதக் குறைபாட்டினால் அவதியுறு கின்றனர். ஆனால் அவர்களுக்கு இந்த நுங்கின் மகத்துவம் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை.

எம்மத்தியிலே ஒரு கோடிக்கும் அதிகமான பனைகள் இருந்தும் அவற்றில் இருந்து கிடைக்கும் பனம்பழங்களில் 5 வீதமான பனம்பழங்கள் கூட உபயோகப்படுத்தப்படுவதில்லை. வண்டுகளிட மிருந்தும் புழுக்களிடமிருந்தும் அவற்றை முற்றாகக் காப்பாற்றி அனைத்துப்பழங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவது எப்படி என்பது சம்பந்தமான வழிமுறைகளை நாம் ஆராயவில்லை.

புரதச்சத்தது நிறைந்த விற்றமின்கள், கனியுப்புக்கள் நிறைந்த எமது அரும் சொத்தான பனம்பழங்கள் வீணடிக்கப்பட்டு மண்ணுக்கு உரமாகிக்கொண்டிருக்கின்றன.



பனம்பழங்களின் உலர்நிறையில் 11 வீதம் புரதமும் பெருமளவு பீட்டா (B) கரோட்டினும் ஏனைய விற்றமின்களும் இரும்பு, கல்சியம் போன்ற கனியுப்புக்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்தப் பனம்பழங்களை மக்கள் விரும்பி உண்ணக்கூடிய வகையில் எவ்வாறு மாற்றங்கள் செய்வது என்பது சம்பந்தமான பல ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். சோடாவுக்கு மாற்றீ டாக பனம் பழங்களிலிருந்து பலவகையான சுவை யான பானங்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும்.



இடியப்பத்தினுள்ளும் பிட்டினுள்ளும் பனங்களி சேர்த்து சமைப் பதன் மூலம் அவற்றின் சுவையும் நிறமும் ஊட் டச்சத்தும் மெருகுபெறும் என்பது சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். பனங்களிகளை இலகுவில் பிரித்தெடுப் பது பாதுகாக்கும் பொறிமுறைகள் கண்டறியப்பட வேண் டும்.



பனம்பழங்களின் மருத்துவக் குணங்களும் அதிலே காணப்படும் நோய் எதிர்ப்புத்தன்மையும் விஞ்ஞானபூர்வ ஆராய்ச்சிகள் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும். இந்த முயற்சி வெற்றி அளிப்பின் நாம் பனம்பழங்களை ஈய உறை களில் சுற்றி அவற்றில் ஸ்ரிக்கரும் ஒட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையும் ஏற்படலாம்.

பலவிதமான விளம்பர யுத்திகளுடன் இறக்குமதியாகி அதிக விலையில் விற்பனையாகும் ஓட்ஸ் வகைகள் எமது அன்றாட உணவுகளில் ஒன்றாக மாறும் நிலை காணப்படுகிறது. ஆனால் எமது சொந்த மண்ணில் விளையும் ஓட்ஸி லும் சிறந்த அதிக நார்த்தன்மை கொண்ட மலிவான இயற்கையான பனங்கிழங்குகளை நாம் புறக் கணித்து விடுகின்றோம். பனங்கிழங்குகள் அதிகளவு நார்த்தன்மையும் மிகக்குறைந்தளவு கொழுப்பும் கொண்டிருப்பதுடன் உலர்நிறையில் 12 வீத புரதத்தையும் பல விற்ற மின்கள் கனியுப் புக்களையும் கொண்டிருக்கின்றன.

பனங்கிழங்குகளில் இருக்கும் மாப்பொருளானது குறைந்த வேகத்திலே உடலினுள் அகத்துறிஞ்சப்படுவதால் இது நீரிழிவு நிலை உள்ளவர்களுக்கும் ஒரு சிறந்த உணவாக காணப்படுகின்றது. பனம்பழங்களின் பயன்கள்அனைத்தையும் எடுத்த பின்பு அதன் கொட்டைகளை பனம்பாத்தி போடுவதன் மூலம் பனங்கிழங்குகளை பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலம் பனம்பழங்களும் பனம் விதைகளும் பயனுடையவையாக மாற்றம் பெறும். அத்துடன் பனங்கிழங்குகளை பதப்படுத்தி பனங்கிழங்கு களாகவே பாதுகாக்கும் பொறிமுறை கண்டறியப்

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

## இஸ்ரேலில் நடை ... தொடர்ச்சி ...

கட்டமைப்பு ரீதியாகவும் நிறுவனமயமாகவும் அதனை மாற்றி, இஸ்ரேல் சட்டத்தின் அடிப்படைக் கொள்கையின் முக்கிய விடயமாகவும் ஆக்கப்பட்டது.

'யூத குடியிருப்புகளை நிறுவுதல், இஸ்ரேல் என்ற தேசத்தின் தேசியக்கொள்கை என்றும் அவற்றை நிறுவுதையும், உறுதிப்படுத்துவதையும் இஸ்ரேல் தேசம் ஊக்குவித்து முன்னெடுக்கும்' என்றும் அந்த சட்டம் கூறுகிறது. கோலான் குன்று *(Golan Heights)* உள்ளிட்ட ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில், இன்னும் பல இடங்களில் யூத மக்களைக் குடியேற்றுவதற்கு இருக்கும் தடைகள் அனைத்தையும் இந்தச்சட்டம் முற்றாக நீக்குகின்றது.''

### 2008 குடிமக்கள் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

'நாட்டுக்குத் துரோகம் இழைத்தார்கள்' என்ற அடிப்படையில் ஒருவருடைய குடியுரிமையைப் பறிப்பதற்கு தேசத்துக்கு உரிமையை வழங்கும் ஒரு சட்டத்தை கெனசெட் இயற்றியது. பாலஸ்தீன மக்களின் குடியுரிமையையும் அவர்களது அடிப்படை உரிமைகளையும் பறித்து, அவர்களை நாடற்றவர்களாக்கி, நாடுகடத்துவதற்கான சட்டரீதியான அதிகாரத்தை இந்தச் சட்டம் அரசுக்கு வழங்குகிறது.

கொலை செய்ய முயற்சி செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, சிறைவாசம் அனுபவித்து வந்த, இஸ்ரேலில் வாழ்ந்த பாலஸ்தீனக் குடிமகனான அலா ஸாயுத்தின் *(Alaa Zayoud)* குடியுரிமையை 2017 ஆகஸ்ட் மாதத்தில், ஹய்பா *(Haifa)* மாவட்ட நீதிமன்று பறித்தெடுத்தது. ஒரு தனிநபரின் குடியுரிமை பறிக்கப்படலாம் என்று இஸ்ரேலிய நீதிமன்றம் தீர்ப்பளித்தது இது முதற் தடவை என்று அடலா சுட்டிக்காட்டினார்.

முன்னாள் பிரதம மந்திரி யிற்ஸாக் றாபினைக் *(Yitzhak Rabin)* கொலைசெய்தவரான யீகால் அமிரை *(Yigal Amir)* எடுத்துக்காட்டாகக் கூறி, பாரதூரமான குற்றங்களுடன் தொடர்புபட்டிருந்த பொழுதிலும், ஒரு யூத குடிமகனுடைய குடியுரிமை பறிக்கப்படவேண்டும் என்று யாருமே கேட்கவில்லை என்று அடலா மேலும் கூறினார்.

1996ம் ஆண்டில், யீகால் அமீரின் குடியுரிமை பறிக்கப்படவேண்டும் என்று முன்வைக்கப்பட்ட வேண்டுகோளை நிராகரித்த உச்ச நீதிமன்றம், ஸாயூத்துக்கு எதிராக மேற்குறிப்பிட்ட சட்டத்தை அமுல்படுத்தியது.

பாலஸ்தீனர்கள் அல்லது வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் யாராவது அல்லது சார்ந்திருக்கும் அமைப்புகள் இஸ்ரேலையோ அல்லது அதன் சட்டவிரோத குடியேற்றங்களையோ எதிர்ப்பவர்களாக இருந்தால், அவர்களைத் தடைசெய்யும் சட்டமூலத்துக்கு 2017ம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்திருந்தார்கள்.

இஸ்ரேல் இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அனுமதியுடன் அல்லது ஒரு தற்காலி வதிவிட அனுமதியுடன் தங்களுடன் வாழ்கின்ற வாழ்க்கைத்துணைகளைக் கொண்டு கிழக்கு ஜெரூசலமில் வதிகின்ற பாலஸ்தீனர்களும் மேற்குறிப்பிட்ட சட்டத்தினால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள்.

பிடிஎஸ் *(BDS - the Boycott, Divestment and Sanctions Movement)* என அழைக்கப்படுகின்ற இஸ்ரேலின் செயற்பாடுகளை எதிர்க்கின்ற அமைப்பைச்சார்ந்தவர்கள் என்று சொல் பவர்களை வாழ்க்கைத்துணைகளாக இவர்கள் கொண்டிருந்தால், அவர்களது அரசியல் அபிப்பிராயங்களின் அடிப்படையில், அவர்களது வதிவிட அனுமதிகள் அல்லது வேறு உரிமைகள் பறிக்கப்படலாம்.

பாலஸ்தீனத்திலும், ஏனைய அரபுப் பிரதேசங்களிலும் தான் ஆக்கிரமித்துவைத்திருக்கும் இடங்களிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும் என்ற பரப்புரையை பிடிஎஸ் என்ற இந்த அமைப்பு மேற்கொண்டுவருகிறது.

**நன்றி அல்ஜஸீரா**

## தமிழ் இன ... தொடர்ச்சி ...

போவதாககிழக்குமாகாணஆளுனர்அறிவித்திருந்த நிலையில் மீண்டும் பெரும் பான்மையினத்தை சேர்ந்தவர்கள் காணிகளை அபகரிக்கும் பணிகளை முன்னெடுத்துள்ள நிலையில் அவற்றினை தடுத்து நிறுத்தி கிழக்கு மாகாண ஆளுனர் உறுதியளித்த விடயங்களை நடை முறைப்படுத்துவதற்கான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

இதேபோன்று வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள இயற்கை வளம்கொண்ட பாதுகாக்கப்படவேண்டிய வனம் பகுதிகளை பல்வேறு தரப்பினருக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக குறித்த பகுதியில் காணிகளை வழங்குவதற்கு மட்டக்களப்பினை சேர்ந்த இராஜாங்க அமைச்சர் ஒருவர் முன்னெடுத்துவரும் செயற்பாட்டிற்கு உடந்தையாக மறுத்த வாகரை பிரதேச செயலாளர் உடனடியாக இடமாற்றப்பட்டு புதிய பிரதேச செயலாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

காணியை தமிழ் மக்களுக்கு வழங்கி அவர்களை வாழ்வாதாரத்தினை மேம்படுத்த வழிகளை ஏற்படுத்தாத இந்த அரசியல்வாதிகள் வெறுமனே தமது புழைப்புக்காகவும் சிங்கள பெரும்பான்மையினத்தின் தேவைகாகவும் முன்னெடுக்கப்படும் இந்த செயற்பாடுகள் குறித்து அண்மைக்காலமாக மட்டக்களப்பில் பல்வேறு வகையில் அதிர்ப்திகள் தெரிவிக்கப்பட்டுவருகின்றன.

கிழக்கு மாகாணத்தினை பாதுகாக்க வேண்டுமானால் தமிழர்களிடம் எஞ்சியுள்ள நிலங்களை பாதுகாக்கவேண்டும்.அவ்வாறு பாதுகாக்கவேண்டிய கட்டாயம் இன்று எழுந்திருக்கின்றது. இன்று மட்டக்களப்பு எல்லைப் பகுதியினை சிங்கள மயப்படுத்த முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளும் வாகரை போன்ற பகுதிகளில் உள்ள காணிகளை பகிர்ந்தளிக்கும் செயற்பாடும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாகவே இருந்துவருகின்றது.

இவ்வாறான நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் இருப்பு பாதுகாக்கப்படவேண்டும். அந்த இருப்பு பாதுகாக்கப்பட வேண்டுமானால் நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.அதற்கான முன்னெடுப்புகளை தமிழ் தேசிய அரசியல் பரப்பில் உள்ளவர்கள் முன்னெடுக்கவேண்டும்.

எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் நிலங்களை பாதுகாப்பதற்காக பாரியளவிலான போராட்டங்களை நடாத்துவதற்கு தமிழ் மக்கள் தயாராகிவருகின்றனர். இதற்கு ஆதரவு வழங்க வடகிழக்கு மாகாணம் உட்பட புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்களும் கைகொடுக்கமுன்வரவேண்டும்.

• • •

## இந்தியாவில் ... தொடர்ச்சி ...

உள்ளது.

முஸ்லீம்கள் பெரும்பான் மையாக வாழும் நகரின் ஊடாக இந்துக்களின் மத ஊர்வலம் சென்றதை தொடர்ந்து அங்கு வன்முறைகள் வெடித்திருந்ததுடன், அது அருகில் உள்ள தகவல் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக நகரங்களுக்கும் பரவியிருந்தது.

அங்கு பள்ளிவாசல் எரிக்கப்பட்டதுடன், மதகுருவும் கொல்லப்பட்டுள்ளார். பெருமளவான முஸ்லீம் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பு தேடி ஓடியுள்ளனர். அந்த பகுதியில் வசித்து வந்த 100 இற்கு மேற்பட்ட மேற்குவங்கத்தை சேர்ந்த முஸ்லீம் குடும்பங்களில் 85 குடும்பங்கள் மீண்டும் மேற்கு வங்கத்திற்கு இடம்பெயர்ந்துள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் இரண்டு முஸ்லீம் மக்கள் அவர்களின் வாகனத்தில் வைத்து எரித்து கொல்லப்பட்டது தொடர்பான சந்தேக நபர்கள் மத ஊர்வலத்தில் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்ட பொய்யான தகவல்களே இந்த வன்முறைக்கு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

## விக்கிபீடியா ... தொடர்ச்சி ...

மாற்றம் செய்கின்றனர் என்பதை கண்டறிந்து கொள்ள முடியும்.

அதன் பின்னர் தான் அமெரிக்காவின் புலனாய்வு அமைப்புக்கள் உட்பட பல நாடுகளின் அரச நிறுவனங்கள் மற்றும் புலனாய்வு அமைப்புக்கள் தகவல்களை மாற்றி வருவது கண்டறியப்பட்டது. இது ஒரு தகவல் தொழில்நுட்ப போர் பல தகவல்கள் திரிந்து பதிவேற்றப்படுகின்றன.

ஈராக் போரில் தமக்கு மற்றும் பொது மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்த தகவல்களை சி.ஐ.ஏ மாற்றியிருந்தது. கியூபாவில் அமெரிக்கா நிர்வகித்துவரும் குவந்தனமோ சிறை தொடர்பான செய்மதி படங்களை எப்.பி.ஐ நீக்கியிருந்தது.

பெருமளவான கட்டுரைகளில் உள்ள தகவல்களையும் அவர்கள் மாற்றியுள்ளனர். சீனாவின் அணுசக்தி திட்டம், ஈரான் அரச தலைவர் மற்றும் ஆஜன்ரீனாவின் கடற்படை தொடர்பான கட்டுரைகளின் தகவல்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தகவல்களை தமக்கு சாதகமாக மாற்றும்படி போன்ற அமைப்புக்கள் தமக்கும் அழுத்தம் தந்ததாக ருவிற்றர் மற்றும் முகநூல் நிறுவனங்களும் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தேர்தலுக்காக ... தொடர்ச்சி ...

உலகின் 55.4 மில்லியன் தொன் அரிசி வியாபாரத்தில் இந்தியா 40 விகிதத்தை கொண்டுள்ளது. எனினும் பசுமதி அல்லாத மலிவான அரிசியை வாங்கும் நாடுகளான பங்களாதேசம், செனகல், நேபாளம் போன்ற நாடுகளே அதிகம் பாதிப்படைந்துள்ளன.

ஆனால் உக்ரைன் போர் மற்றும் கால நிலை மாற்றம் போன்ற காரணங்களால் தானியங்கள் பற்றாக்குறை ஏற்படலாம் என்ற அச்சம் இந்தியாவுக்கு உண்டு. இந்தியாவில் 50 விகிதமான மக்கள் அரிசியையே உணவாக கொண்டுள்ளனர்.

எதிர்வரும் வருடம் பொதுத்தேர்தல் வரவுள்ள நிலையில் மக்கள் பட்டினியாக இருந்தால் அதன் தாக்கம் வாக்களிப்பில் தென்படும் என்பதை உணர்ந்த இந்திய அரசு மலிவான அரசியின் ஏற்றுமதியை தடை செய்துள்ளது.

## பொருளாதார ... தொடர்ச்சி ...

கடன்பெறும் எல்லையை என்றுமில்லாதவாறு உயர்த்தியிருந்தது. இது மட்டுமல்லாது, அமெரிக்காவின் முன்னாள் அரச தலைவர் ரம்பின் காலத்தில் இருந்தே பொருளாதாரம் வீழ்ச்சி காண ஆரம்பித்துள்ளது என பிற்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அது அமெரிக்காவின் தரத்தை ஏஏஏ இல் இருந்து ஏஏ பிளஸ் என்ற தரத்திற்கு தரமிறக்கியுள்ளது.

ஆனால் தற்போதைய அரச தலைவர் பைடனின் பொருளாதார திட்டங்களை பிற்ஸ் அமைப்பு கருத்தில் எடுக்கவில்லை. இந்த தரப்படுத்தல் தொடர்பில் நாம் முன்னரே அறிந்ததால் அது தாக்கத்தை ஏற்படுத்தாது என ஜெலன் தெரிவித்துள்ளார்.

## நிவாரணம் ... தொடர்ச்சி ...

முறையாக வேலைக்கு செல்லாததால் ஏற்படும் வேலைநாள் குறைவுத்தன்மை தமக்கு பெரும் சவாலாக விளங்குவதாகவும் கம்பனிகள் கூறி வருகின்றமையும் நோக்கத்தக்கதாகும். எவ்வாறெனினும் உழைக்கும் தொழிலாளர்களுக்கான நியாயமான ஊதியத்தினை வழங்குவதற்கு ஆயிரம் கதைகூறும் கம்பனிகள் மேல்மட்ட உத்தியோகத்தர்களுக்கு கணிசமான ஊதியத்தை வழங்கி வருவதாக தொழிலாளர்கள் தரப்பில் ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது.



இதேவேளை தற்போது டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதால் உலக சந்தையில் தேயிலையின் விலை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. இது பெருந்தோட்ட கம்பனிகளுக்கு பாரிய சவால் என்றாலும் கூட இயன்றவரை தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாக முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது. கடந்த காலங்களில் டொலரின் விலை 380 ரூபா வரை காணப்பட்ட நேரத்தில் தேயிலை கிலோவொன்று 1800 ரூபா முதல் 1900 ரூபாவரை விற்பனையாகி இருந்தது. இந்நிலையில் டொலரின் பெறுமதி பாரிய வீழ்ச்சியொன்றை சந்தித்துள்ள நிலையில் தற்போது தேயிலைக் கிலோவொன்று 800 ரூபா முதல் 900 ரூபா வரையிலேயே விற்பனையாகின்றது. இது தேயிலை உற்பத்தியில் பாரிய சரிவை ஏற்படுத்தியுள்ளது. என்றாலும்கூட அதிகரித்த தேயிலை உற்பத்தியின் ஊடாக ஓரளவு இந்த வீழ்ச்சியை ஈடுசெய்யக் கூடிய திட்டங்களை தம்மால் முன்னெடுக்கக்கூடியதாக இருக்குமென்றும் முதலாளிமார் சம்மேளனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. இதேவேளை தற்போது பெருந்தோட்டங்களில் சுமார் 150,000 தொழிலாளர்களே உள்ளனர். இந்நிலை தொடருமானால் எதிர்காலங்களில் பெருந்தோட்டங்களில் ஆளணிப் பற்றாக்குறை ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகமுள்ளதாகவும் சம்மேளனச் செய்திகள் வலியுறுத்துகின்றன. இதேவேளை டொலரின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் உலகச்சந்தையில் தேயிலையின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக நீலிக்கண்ணீர் வடிக்கும் கம்பனிகள், உலகச் சந்தையில் தேயிலை விலை அதிகரிப்பு ஏற்பட்டபோது அதன் நன்மைகளை தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்காததன் காரணமென்ன? என்று தொழிலாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர். எனவே எவ்வளவுதான் வருமானம் கிடைத்தபோதும் கூட கம்பனிகளின் பஞ்சப்பாட்டுக்கு ஒருபோதும் குறைவிருக்கவில்லை.



இதேவேளை உற்பத்தித்திறனை அதிகரிக்காவிட்டால் பெருந்தோட்டத் துறை நசிந்துபோய் விடக்கூடிய அபாயகரமான சூழ்நிலை மேலோங்குமென முதலாளிமார் சம்மேளனம் பலமுறை எச்சரித்துள்ளது. இந்நிலையில் உற்பத்தித்திறன் உயராமைக்கு வெறுமனே தொழிலாளர்கள் மீது மட்டும் பலிபோடுவதால் எவ்விதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை. தொழிலாளர்கள் அர்ப்பணிப்புடன் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். உற்பத்தித்திறனை அதிகரிக்க தோட்டங்களை சிறந்த முறையில் பராமரிக்க வேண்டும். மீள்நடுகை செய்யப்படுவதோடு பசளை உபயோகம்,புல்வெட்டுதல், மண்ணரிப்புக்குஎதிரானநடவடிக்கைகள்என்பனமுறையாக மேற்கொள்ளப்படுவதும் அவசியமாகும். இதன்மூலமாகவே உற்பத்தியையும், உற்பத்தித்திறனையும் அதிகரிக்கக் கூடியதாகவிருக்கும். இதைவிடுத்து இலாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு ஏனைய நடவடிக்கைகள், பராமரிப்பு போன்றவற்றை கைவிடுவதாலும், கவனம் செலுத்தாதவிடத்தும் உற்பத்தித்திறன் வீழ்ச்சியடையும்.

உற்பத்தியும்,உற்பத்தியாக்கமும் உயர வேண்டுமென்றால் உழைப்புக்கு மதிப்பளிக்கப்படாத முறைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுதல் வேண்டும். மேலும் உழைப்புக்கேற்ற ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்குவதன் மூலமும், தொழிலாளர்களின் சேமநலன்களுக்கு முக்கியத்துவமளிப்பதன் மூலமும் தேயிலைத் தொழிற்றுறையில் ஒரு முன்னேற்றகரமான மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இதேவேளை தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தில் அழுத்தங்களை பிரயோகிக்கும் தொழிற்சங்கங்கள் சம்பள உயர்வு வழங்கப்பட்டதன் பின்னர் உற்பத்தியினை அதிகரித்து இத்துறையினை வளர்த்தெடுப்பது குறித்து கண்டு கொள்வதில்லை என்றும் முதலாளிமார் சம்மேளனம் ஏற்கனவே ஒரு குற்றச்சாட்டினை முன்வைத்திருந்தது. இக்குற்றச்சாட்டு தொடர்பில் தொழிற் சங்கங்கள் கவனம் செலுத்துவதோடு, தொழிலாளர்களினதும் தோட்டங்களினதும் முன்னோக்கிய நகர்விற்கு ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகும்.

• • •

## ரணிலின் அரசியல்... தொடர்ச்சி ...

அதில் இருந்து விலகுமாறு கோரியுள்ளனர். எனினும் கோட்டாபய இந்த கோரிக்கையை நிராகரித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கோட்டாபயவுக்கும் மற்றைய ராஜபக்ஷக்களுக்கும் இடையில்உருவாகியிருக்கும்முரண்பாடுகளையும் இச்சம்பவம் பிரதிபலிக்கின்றது.

இதனிடையே புதிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கொழும்பில் அரசியல் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, லசந்த அழகியவண்ண, நிமல் லான்சா, துமிந்த திஸாநாயக்க, நளின் பெர்னாண்டோ, மகிந்த அமரவீர, பிரியங்கர ஜயரத்ன ஆகியோர் இந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டுள்ளனர். புதிய அரசியல் அணி ஒன்றை அமைத்துக்கொண்டு ஐ.தே.க.வுடன் கூட்டணி அமைப்பதுதான் இவர்களது நோக்கம் எனக் கூறப்படுகின்றது. ராஜபக்ஷக்களுடன் தம்மை அடையாளம் காட்டுவது தமது எதிர்கால அரசியலைப் பாதிக்கும் என இவர்கள் கருதுகின்றார்கள்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் செயலாளரான சுகீஷ்வர பண்டார, எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட திட்டமிட்டுள்ளார். இவ்வாறான நிலைமையில், நிமல் லான்சா தலைமையிலான புதிய கூட்டணி எதிர்வரும் ஜனவரி மாதம் 19 ஆம் திகதி மிகப் பெரிய பொதுக் கூட்டம் ஒன்றை நடத்த தயாராகி வருகிறது. அதற்கு முன்னர் மொட்டு அணியிலிருந்து மேலும் சிலர் வெளியே செல்வதைத் தடுப்பதற்காகத்தான் ரணிலை அவசரமாக சந்தித்து பேசியிருக்கின்றார் பசில். அடுத்து வரும் வாரங்களில் இன்னும் சுவாரஸ்யமான சம்பங்களை எதிர்பார்க்கலாம்.

இந்த அணி உருவாகுவதற்கு முன்னதாக ஐ.தே.க.வை புனரமைத்து அதனை பலமான ஒரு கட்சியாக மீளக்கட்டியெழுப்புவது ரணிலின் நோக்கமாக இருக்கின்றது. தமது கட்சியைப் பலப்படுத்திக் கொண்டு மொட்டுவிலிருந்து பிரந்து வரக்கூடிய அணி, மற்றும் சஜித்திடமிருந்து பிரிந்து வரக்கூடியவர்களை இணைத்து பலமான கூட்டணி ஒன்றை அமைப்பதுதான் ரணிலின் திட்டம் என அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவிக்கின்றார்கள். 13 ஐ தருவதற்குத் தயாராக இருப்பதாகக் காட்டிக்கொள்வதன் மூலமாக தமிழ் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என ரணில் கருதுகின்றார். மறுபக்கத்தில் அதில் பொலிஸ் அதிகாரம் இருக்காது எனக் கூறுவதால் சிங்களக் கடும் போக்காளர்களையும் தனக்கு எதிராக துாண்டிவிட முடியாதிருக்கும் என்பது அவரது கணிப்பு!

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் தடை செய்யப்பட்ட ஐந்து முஸ்லிம் அமைப்புக்கள் மீதான தடையையும் ரணில் கடந்த வாரம் நீக்கியிருக்கின்றார். இது முஸ்லிம் வாக்குகளை இலக்குவைத்த ஒரு நகர்வாகவே பார்க்கப்படுகின்றது. அதேவேளையில், இஸ்லாமிய நாடுகளிலிருந்து உதவிகளைப் பெறுவதற்கும் இது அவருக்கு உதவலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றுவிட்டால், தாம் அமைக்கும் புதிய கூட்டணி மூலமாக நாடாளுமன்ற பெரும்பான்மையைப் பெற்றுவிட முடியும் என்பதும் ரணிலின் திட்டம். முதலில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி! அதன் பின்னர் மற்றைய வெற்றிகள் ஒன்றன்பின் ஒன்றாக வரும் என்பது அவரது கணக்கு. சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தொகுதிக் கடன் செப்டம்பர் மாதத்தில் கிடைக்கும். அதனையடுத்து வரப்போகும் புதிய வருடத்துக்கான பட்ஜெட், தேர்தலை இலக்காகக் கொண்டதாக மக்களுக்கு ஓரளவுக்கு நிவாரணங்களைக் கொடுப்பதாக அமையலாம்.

ரணிலின் இந்த அரசியல் நகர்வுகள் ராஜபக்ஷக்களின் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கும் என்பதும் தெரிகின்றது.

• • •

## அழுத்தங்களு ... தொடர்ச்சி ...

நாடுகளின் பொருளாதார கூட்டணி எச்சரித்துள்ளது. பேச்சுவார்த்தைக்காக நைஜீரியாவின் முன்னாள் அரச தலைவரும் அங்கு அனுப்பப்பட்டுள்ளார்.

ஆனால் இது ஒரு உள்நாட்டு விவகாரம் என தொவித்துள்ள நைஜெரின் புதிய தலைவர், வெளிநாடுகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக அணி திரளுமாறு மக்களை கேட்டுள்ளார்.

உலகின் மிக வறுமையான இந்த நாட்டுக்கான மின்சார விநியோகத்தை நைஜீரியா நிறுத்தியுள்ளது. ஆனால் நைஜெர் மீதான படை நடவடிக்கையை தாம் எதிர்ப்பதாக ரஸ்யா தெரிவித்துள்ளது. நைஜெருக்கு ஆதரவாக தாம் போரில் பங்குபற்றுவோம் என அண்மையில் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சிமாற்றம் இடம்பெற்ற மாலி மற்றும் பேர்கினா பசொ ஆகிய நாடுகள் தெரிவித்தள்ளன.

## விடைபெற்ற ... தொடர்ச்சி ...

காலத்திலேயே தன்னருகில் வைத்துக் கொண்டு அப்துல் ஹமீத் அவர் கள் நெகிழ்ந்திருக்கிறார்.

விமல் சொக்கநாதனின் “வாலிப வட்டம்” நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இளைஞர்கள் பின்னாளில் இலங்கைப் பாராளு மன்றத்தின் உறுப்பினர்களாகவும் விளங்கிய தலைமைத்துவப் பண்பைக் கொண்டதுவும், அவர்களோடு இன்னும் அந்த நிகழ்ச்சியைக் கேட்டு மகிழ்ந்த நேயர்கள் இன்று தாத்தா நிலையிலும் விமலின் ரசிகர் என்று பெருமையோடு சொல்லிக் கொள்வதாகவும் அப்துல் ஹமீதோடு, விமல் சொக்கநாதன் கலந்து கொண்ட ஐபிசி நேர்காணலில் சொல்லி மகிழ்ந்தார்.

‘அறிவிப்பாளரோடு அரை மணி நேரம்” என்ற புதுமையான இலங்கை வானொலி நிகழ்ச்சி வழி, சக அறிவிப்பாளர்களையும் அவர்களை நேசிக்கும் நேயர்களையும் கலந்துறவாட வைத்து மகிழ வைத்ததும் விமல் சொக்கநாதனின் இன் னொரு பரிமாணம்.

*1976* ஆம் ஆண்டு லண்டனில் குடியேறிய விமல் சொக்கநாதன் அங்கு தனது சட்டத்தரணியான துணைவியார் சகிதம் ஒரு சட்ட நிறுவனத்தை நடத்தி வந்திருந்தார்.

விமல் சொக்க நாதன் அவர்களின் வானொலி வேட்கைக்குத் தீனி போட்டது லண்டன் பிபிசி.

லண்டன் பிபிசியின் தமிழோசையில் பகுதி நேரமாக நிகழ்ச்சி வழங்குனராகவும் பணியாற்றி வந்தார். இலங்கை வானொலியில் பல்சுவை நிகழ்ச்சிகளை வழங்கிவந்த விமல் சொக்கநாதனுக்கு பிபிசியில் செய்தி ஒலிபரப்புப் பணி. அவர் ஆரம்பத்தில் பணிபுரிந்த சட்ட நிறுவனத்தின் இயக்குநர், தன்னிடம் சட்ட உதவிகளைத் தேடி வரும் தமிழர்களுக்கு “இவர் பிபிசியில் வேலை செய்கிறார்” என்று பெருமையாக விமல் சொக்கநாதனை அறிமுகப்படுத்துவாராம்.

சிறந்த அறிவிப்பாளராகவும் மொழி பெயர்ப்பாளராகவும் தனது சக ஒலிபரப்பாளர் களால் அங்கு அவர் பாராட்டப் பட்டார்.

இலங்கை வானொலியில் குறுகிய காலத் தில் பெரும் நேயர் வட்டத்தை உருவாக்கியவர். பின்னர் பிபிசி தமிழோசை கேட்கும் உலகத் தமிழ் நெஞ்சங்களின் இதயத்தில் மட்டுமல்ல. ஈழத்தில் போர் முற்றிய நெருக்கடியான சூழலில் அவரது குரலை மின்சாரமில்லா இரவுகளில் ஈழத்தாயகத்தில் உள்ளோர் மறுபக்கச் செய்திகளைக் கேட்பதற்காகத் தவம் கிடந்ததெல்லாம் வரலாறு.

பிரான்ஸை மையப்படுத்திய *TRT* வானொலி மற்றும் தொலைக்காட்சி, *TTN* தொலைக்காட்சி, *GTV* தொலைக்காட்சி, *IBC* தமிழ் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகிய ஊடகங்கங்களும் அவரது வானொலி அறிவுச் சொத்தை உள்வாங்கிப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

“மனதைத் திறவுங்கள்” நிகழ்ச்சி வழியாகவும், ஐபிசி சிற்றலை ஒலிபரப்பின் வழியே ஈழத்துக்கு உறவுப்பாலம் அமைத்த “களம் பல காண்போம்” நிகழ்ச்சி வழியாகவும் ஈழத்து மண்ணில் தன் வேரைப் பரப்பினார். அதன் விளைவாக வன்னிக்கு விருந்தினராய் அழைக்கப்பட்டு, ஒரு வாரம் சிறப்பு வானொலி வழிகாட்டல் பயிற்சி நெறியை வன்னியில் உள்ள ஊடகருக்கு வழங்கவும் பயணப்பட்டு அப்பணியைச் செம்மைப்படுத்தினார்.

லண்டனில் வாழும் மூத்த பத்திரிகையாளர் ஈ.கே.ராஜகோபாலின் புதினம் பத்திரிகையிலும் பின்னாளில் தன் இறப்பு நேரும் வரை வீர கேசரியிலும் “விமலின் பக்கம்” என்ற தொடரின் வழியாக சமூக நடப்புகளைத் தன் பாணியில் கொடுத்து வந்தார்.

*2007* ஆம் ஆண்டில் அவர் வெளியிட்ட “வானொலிக் கலை” என்பது ஒவ்வொரு ஒலிபரப் பாளன் வீட்டிலும் இருக்க வேண்டிய ஆகச் சிறந்த கையேடு. ஒவ்வொரு அத்தியாயத்திலும் பொருள் நிறைந்த வழிகாட்டியாகக் கொண்டு போவார்.

அந்த நூல் வெளியீட்டு விழாவை சென்னை யில் இருந்து, கனடா, சிட்னி காண எடுத்திருந்தார்.

விமலின் பக்கங்கள் என்ற நூலைத் தொடர்ந்து ‘இலண்டனில் இருந்து விமல்” என்ற நூல் எங்கள் விமல் சொக்க நாதன் அவர்களது நிறைவான பங்களிப்பாக அமைந்து தன் தாயத்தி லும் விழாக் கண்டு விடைபெற்றுக் கொண்டார்.

ஒரு பழுத்த கல்விமானாக இருந்தாலும் ஒலிபரப்புத் துறை மீது கொண்ட காதலால் தன்னுடைய வாழ்நாளின் அடிநாதமாக அந்த வேட்கையை ஊடகத்துறை மீது நாட்டம் கொண்ட ஒவ்வொருவரும் செய்ய வேண்டும் என்று அவாக் கொண்டவர் என்பதை அவரின் பேட்டிகளின் வழியாக உணரலாம்.

தான் கல்வியில் பெரிய உயரத்தைத் தொட்டாலும் வானொலிப் பணியே மகத்தான ஆத்ம திருப்தி தந்த பணியாக அவர் மனது திடம் கொண்டதால் தான் *50* ஆண்டுகளைக் கடந்து வானொலி வாழ்வோடு அவரை இருக்க வைத்தது.

“முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஒலி பரப்புத் துறையில் பணியாற்றிய அனுபவம் எனக்கிருந்தாலும், விமல் சொக்கநாதனைக் கண்ட நாள் முதலாய் அவருடைய மாணவனைப் போலச் செய்திக்களைப் படித்துப் பழகினேன்” என்கிறார் பிபிசி புகழ் எஸ்.சம்பத்குமார் என்ற மூத்த ஊடகர்.

*"அவரவர் வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் அர்த்தங்கள்"*

பாடல் தன்னை ஈர்த்ததொன்றாகத் தன் வாழ்வியல் பயணத்தை ஒப்பிட்டுப் பார்க்க வைத்ததாக இலங்கை வானொலி “தென்றல்” அதிதியாகப் போன போது விமல் சொக்கநாதன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

அதே பாடலில் வந்து போகும்

*"நிலவுகள் சேர்ந்து பூமியில் வாழ்ந்ததே அது ஒரு பொற்காலம்"*

என்று வாழ்ந்து மறைந்த நம் வானொலிக் குயில் களை நினைத்து மனம் பாடுகிறது.

காற்றில் கலை படைத்துக் காற்றலையில் சங்கமமாகிய எங்கள் விமல் அண்ணா என்ற விமல் சொக்கநாதன் அவர்கள் உலகத் தமிழ் ஊடகப் பரப்பில் அவர்கள் அழியாச் சொத்தாக விளங்கி நிற்பார்.

**முகநூலில் இருந்து**

## நைஜெரின் இரா ... தொடர்ச்சி ...

இதனிடையே, நைஜெர் மீதான படை நடவடிக்கையை தாம் எதிர்ப்போம் என ரஸ்யா தெரிவித்துள்ள அதேசமயம், அவ்வாறான ஒரு படை நடவடிக்கைக்கு தாம் ஆதரவு வழங்கப் போவதில்லை என இத்தாலியின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். ஆனால் ஆபிரிக்க நாடுகளை கொண்டே ஆபிரிக்க நாடுகளுடன் மோதும் திட்டத்தை வகுப்பதையே அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் விரும்புகின்றன. அதாவது தற்போது ரஸ்யா - உக்ரைன் போர் போல அயலவர்களுக்கு இடையிலான மோதல்.

பல ஆபிரிக்க நாடுகள் மேற்கு நாடுகளின் உதவிகளிலேயே தற்போதும் அதிகம் தங்கி வாழ்கின்றன. இஸ்லாமிய தீவிரவாதிகளை தேடுகிறோம் என்ற போர்வையில் பல ஆபிரிக்க நாடுகளில் அமெரிக்க மற்றும் பிரான்ஸ் படையினர் தமக்கான தளங்களை அமைத்தபோதும் அவர்களின் உண்மையான நோக்கம் பொருளாதார நலன்சார்ந்தது என்பதை பல நாடுகள் தற்போது உணரத்தலைப்பட்டுள்ளன. உதாரணமாக மாலி யில் *2015* ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆடம்பர விடுதி மீதானதாக்குதலை குறிப்பிடலாம். அதாவது தீவிரவாத தாக்குதல் அச்சம் உள்ளது எனவே நாம் அதனை தடுப்பதற்காக தளம் அமைத்துள்ளோம் என்பது மேற்குலகத்தின் வாதம்.

ஆனால் தற்போது உலகம் மாறிவருகின் றது. புவிசார் அரசியலில் பல நாடுகள் கள மிறங்கியுள்ளன. அமெரிக்காவினதும் அதன் கூட்டணிநாடுகளினதும் ஆதிக்கத்திற்கு எதிராக ரஸ்யாவும், சீனாவும் களமிறங்கியுள்ளன. அதன் அர்த்தம் என்னவெனில் தற்போது ஆபிரிக்க நாடுகளுக்கு தாம் யாரை தெரிவுசெய்தால் தமக்கு அதிக நன்மை கிடைக்கும் என்ற தெரிவு உள்ளது. முன்னையதை போல ஒரு வல்லரசு நாட்டை அவர்களை சார்ந்துதான் இயங்கவேண்டும் என்ற நிலை இல்லை. இதன் மூலம் அவர்கள் தமது அரசியல் தன்னிறைவை அடையமுடியும்.

உதாரணமாக தற்போது ஆபிரிக்க நாடுகள் மேற்குலக நாடுகளின் படைத்துறை உதவிகளை விட வக்னர் குழுவின் படைத்துறை உதவிகளையே அதிகம் நாடுகின்றனர். அனைத்துலக நாணயநிதியத்தை தவிர்த்து சீனா வின் பட்டுப்பாதை திட்டத்தை நாடுகின்றனர்.



உக்ரைன் போர் என்பது மேற்கலகத்தின் தனியான வல்லரசு என்ற நிலையை தகர்த்ததால் தற்போது ஆபிச்க்க நாடுகள் மேற்குலகத்திற்கு எதிராக துணிச்சலாக களமிறங்க தயராகிவிட்டன. தமது நாடுகளில் நிலைகொண்டுள்ள மேற் குலகத்தின் படையினரையும் அவர்கள் வெளி யேற்றி வருகின்றனர்.

தற்போதைய புதிய ஒழுங்கில் ஆபிரிக்க நாடுகளுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்களை ரஸ்யா வழங்க, பொருளாதார உதவிகளை சீனா வழங்கிவருகின்றது. அந்த நாடுகளில் இறைமையில் தலையிடுவதில்லை என்ற உத்தர வாதங்களையும் அவர்கள் வழங்குகின்றனர்.

யுரேனியம் மட்டுமல்லாது தங்கம், நிலக்கரி, இரும்பு, வெள்ளீயம், பொஸ்பரஸ், பெற்றோலியம், மொலிப்டினம், உப்பு என பல கனிமவளங்களின் உறைவிடமாக நைஜெர் உள்ளது. எனவே ஒரு படைத்துறை மோதல் இன்றி அந்த நாட்டை இழப்பதற்கு பிரான்ஸ் விரும்பாது. ஆனால் இந்த மோதலில் மேற்குலகம் நைஜெரை இழந்தால் அது சீனாவுக்கு பொருளாதார ரீதியில் அதிக நன்மையக்கும்.

ஆபிரிக்க நாடுகளில் இராணுவப்புரட்சிகள் மற்றும் உள்நாட்டு யுத்தங்கள் என்பன மேற்குலகத்தினருக்கு வழமையான நிகழ்வாக இருந்தாலும், தற்போது ஏற்பட்டுள்ள புவிசார் அரசியல் மாற்றங்களில் அதன் முக்கியத்துவம் மிக அதிகமானது.

• • •

## பனை மரங்கள் ... தொடர்ச்சி ...

பட வேண்டும்.

எமது மண்ணின் பொருளாதார வளங்களை மேம்படுத்தி அதற்கான சந்தை வாய்ப்புக்களை உருவாக்கும் கற்கைமுறைகளும், செயற்றிட்டங்களும் எமது பல்கலைக்கழகங்களில் போதிக்கப்பட வேண்டும். அதுவே எமக்கான இன்றைய தேவையாக உள்ளது.

**தகவல் உதவி**

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**